
KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823

Follow us:
# தமிழன்
THAMILAN தமிලන්
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர்: 05, இதழ்: 214 விசுவாவசு வருடம், சித்திரை மாதம் 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(22.04.2025) ஹிஜ்ரி 1446, ஷவ்வால் - 23, 0115 886187- விலை ரூ.40 பக்கங்கள் 12

KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823



# புனித பாப்பரசர் இறைபதம் அடைந்தார்

## அருட்தந்தை பிரான்சிஸின் மரணத்தை வத்திக்கான் உத்தியோகபூர்வமாக அறிவித்தது

## உலக நாடுகளின் தலைவர்கள் அஞ்சலி

» 10பக்கம்

## சட்டத்தை திருத்த அரசுக்கு தைரியம் தேவை

### விரைந்து செயற்படுமாறு பேராயர் வலியுறுத்து



ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் சம்பவம் உள்ளிட்ட நாட்டில் இடம்பெற்ற அநீதிகள் தொடர்பில் நடைமுறையிலுள்ள சட்ட ஒழுங்குகளையும் நீதியை நிலைநாட்ட முடியவில்லை என்றால் அந்த சட்ட ஒழுங்குகளை திருத்துவதற்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் தைரியத்துடன்...

02 பக்கம்

## மைத்ரியின் வாக்குமூலம் குறித்து விசேட கவனம்

### மூடிமறைக்கும் நோக்கமில்லை என்கிறார் விஜித



''ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் மீதான விசாரணைகளின்போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வாக்குமூலம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுமென்பதுடன், இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணை அறிக்கைகளை மூடிமறைக்க வேண்டிய அவசியம் தமது அரசாங்கத்துக்கு இல்லை'' என்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். மஹர பிரதேசத்தில் நேற்று முன்தினம் (20) இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

02 பக்கம்

## பாப்பரசர் பிரான்சிஸின் அர்ப்பணிப்பு உலகில் அழியாத அடையாளம்

### ஜனாதிபதி அநுர இரங்கல்



» 02 பக்கம்

## நான் தலையிடாவிடின் பிள்ளையானே சூத்திரதாரி

### கம்மன்பில பெருமிதம்



ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரியாக பிள்ளையானின் பெயரை அறிவிக்க அரசாங்கம் திட்டமிட்டிருந்தது. ஆனால், தனது தலையீட்டால் அரசாங்கத்தின் அந்தத் திட்டம் முறியடிக்கப்பட்டு ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரியை உருவாக்கும் அரசாங்கத்தின் சூழ்ச்சியை தனியொருவனாக தான்...

02 பக்கம்

## கத்தோலிக்க மக்களுக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும்

### திலித் எம்.பி. சுட்டிக்காட்டு



''உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தினூடாக, அரசியல் ரீதியான கொலை இடம்பெற்றுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சித்தரிக்கிறார். ஆனால், அவரின் மனச்சாட்சிக்கு எதிராகவே இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார் என்பது எனக்குத் தெரியும். இதன் யதார்த்தம் என்னவென்பதை அவர் அறிவார். கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்கு....

02 பக்கம்

## தபால்மூல வாக்களிப்பு வியாழன்வரை ஒத்திவைப்பு




உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தபால்மூல வாக்களிப்பை இன்றிலிருந்து (22) முன்னெடுக்கத் திட்டமிட்டிருந்த நிலையில், அந்தத் திகதிகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் வியாழக்கிழமை (24) தபால்மூல வாக்களிப்பு ஆரம்பமாகுமென தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

''உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தபால்மூல வாக்களிப்புக்காக இதற்கு முன்னர் ஏப்ரல் மாதம் 22, 23 ஆம் திகதிகளை அறிவித்திருந்தோம்.

02 பக்கம்




ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்கு நீதிகோரி முன்னெடுக்கப்பட்ட நடைபவனி நேற்று (21) கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தை நோக்கி கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது. (படப்பிடிப்பு – லலித் பெரேரா)

## உஷ்



உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக அரச புலனாய்வுத்துறை ஆய்வொன்றை செய்ததாம்.

அதில் தமிழ் பகுதிகளில் அரசுக்கு முன்னர் இருந்த ஆதரவில் சடுதியான வீழ்ச்சி இருப்பது தெரியவந்துள்ளதாம். சிங்கள மக்களிடையேயும் முன்னர் இருந்த ஆதரவு குறைந்திருந்தாலும் பெரும்பான்மை சபைகளை சிங்கள பகுதிகளில் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றுமாம்.

இதேவேளை மலையகம் மற்றும் கிழக்கு மாகாணத்திலும் முன்னர் இருந்த ஆதரவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் அந்த அறிக்கையினையடுத்து , அவற்றை சரிசெய்யும் வேலைகளை ஆளுங்கட்சி செய்துவருவதாக அறியமுடிகின்றது.

## வேட்புமனுக்கள் மீதான 60 மனுக்கள் நிராகரிப்பு

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்டிருந்த வேட்புமனுக்களை நிராகரித்தமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த 60 மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமல் நிராகரிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனுக்கள் உரிய கால எல்லைக்குள் சமர்ப்பிக்கப்படாமையை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானத்தை அறிவிப்பதாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைமை நீதியரசர் மொஹமட் லபார் தாஹீர் மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் தலைமையிலான நீதியரசர்கள் குழாமினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

## ஜனாதிபதி நிதிய விவகாரம்:


### மைத்ரியிடம் 07 மணிநேரம் சி.ஐ.டியினர் விசாரணை



''ஜனாதிபதி நிதியத்திலிருந்து நிதி பெற்றுக்கொடுக்கும்போது அதில் ஒழுங்கின்மை எதுவும் ஏற்பட்டிருக்குமாக இருந்தால் அது தொடர்பில் விசாரணை செய்வது சிறந்த விடயமாகும் என்றும்...

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...



அடுத்த உயிர்த்த ஞாயிறு தினத்துக்குள்ளேயாவது சூத்திரதாரிகளை கண்டு பிடிச்சிடுவாங்களா...? இல்ல எல்லாம் பொலிட்டிக்கல் ட்ராமாவோ...?

## நான் தலையிடாவிடின்...

தோற்கடித்துவிட்டதாக பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கட்சித் தலைமை அலுவலகத்தில் நேற்று (21) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

''தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மீண்டும் ஒருமுறை இந்நாட்டு மக்களை தோற்கடிப்பதற்கு எடுத்த முயற்சியை, எங்களால் தோற்கடிக்கக்கூடியதாக இருந்தது. இந்த அரசாங்கத்துக்கு ஆறு மாதங்கள் நிறைவடைந்ததன் பின்னர் பேராயர் அறிவிப்பொன்றை வெளியிட்டு, ''ஏப்ரல் 21ஆம் திகதி ஆறு வருடங்கள் நிறைவடைகின்றன. அன்றைய தினத்துக்கு முன்னர் பிரதான சூத்திரதாரியை வெளிப்படுத்தாவிட்டால் கத்தோலிக்க மக்களுடன் வீதிக்கு இறங்குவேன்'' என்று அரசாங்கத்துக்கு அச்சுறுத்தல் விடுத்திருந்தார். அதன் பின்னர் மார்ச் 30ஆம் திகதி ஏப்ரல் 21 க்கு முன்னர் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களை நாட்டுக்கு அறிவிப்பதாக தெரிவித்திருந்தார். ஆனால் நடைபெறவில்லை.

பிள்ளையானை தடுப்புக்காவலில் வைத்து, அவர் வழங்கிய வாக்குறுதிக்கமைய குறிப்பிட்ட நபரே பிரதான சூத்திரதாரி என்று அரசாங்கத்தின் யோசனையிலிருக்கும் நபரின் பெயரை குறிப்பிடவே திட்டமிட்டிருந்தார்கள். அதன் காரணமாகவே பிள்ளையானை கைதுசெய்ததன் பின்னர் எவரையும் சந்திக்க அவருக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. சட்டத்தரணியை சந்திப்பதற்கான வாய்ப்பையும் மறுத்தார்கள். காரணமின்றி அவரை கைதுசெய்யவும் நடவடிக்கை எடுத்தார்கள்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் பிள்ளையானை கைதுசெய்ததாக ஜனாதிபதி கூறுகிறார். மறுபுறம், பேராசிரியர் ஒருவரை காணாமலாக்கிய சம்பவம் தொடர்பிலேயே அவரை கைதுசெய்ததாக தொழில் அமைச்சர் குறிப்பிடுகிறார். இதற்கிடையில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிள்ளையான் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் தகவல் வழங்கிவருவதாக பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தார். இதுதொடர்பில் சமூக ஊடகங்களிலும் செய்திகள் வெளியிடப்பட்டன.

நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்காக உயிரை பணயம் வைத்து நபரின் வாழ்க்கையை அச்சுறுத்தலுக்குள்ளாக்கி ஒழுக்கக்கேடான நாடகத்தை நிறுத்துவதற்காகவே அரசாங்கத்தின் தந்திரங்களை தோற்கடித்து சட்டத்தினூடாக தடைவிதித்து பிள்ளையானை சந்தித்தோம். அவரை சந்தித்தபோது, அவரை கைதுசெய்வதற்காக வழங்கப்பட்ட ஆவணத்தில் கைதுசெய்வதற்கான காரணம் எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அவரை கைது செய்வதற்கான காரணம் பொலிஸாருக்கும் தெரியாது.

மேலும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் உங்களிடம் விசாரணை செய்வதாக சமூக ஊடகங்களில் வெளியான செய்தி உண்மையா என்று வினவினேன். அதற்கு, அவர் இதுவரையில் அதுகுறித்து என்னிடம் எதுவும் வினவவில்லை, அவ்வாறு வினவினால் கூறுவதற்கு எனக்கு எதுவும் தெரியாது என்று கூறினார். 2015 – 2020ஆம் ஆண்டிலிருந்து பொலிஸாரின் கட்டுப்பாட்டிலேயே இருந்தார். அதன் பின்னர் அவருடனான சந்திப்பை ஊடகங்களினூடாக வெளியிட்டு அரசாங்கத்தின் உண்மை முகத்தை வெளிப்படுத்தியதால் தற்போது அரசாங்கத்தினர் எனக்கு எதிராக திசைதிரும்பியுள்ளனர். இதனூடாக ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரியை உருவாக்கும் திட்டத்தை தனியொருவனாக தோற்கடித்துவிட்டேன்'' என்றார்.

## வேட்புமனுக்கள் மீதான...

ஐக்கிய தேசியக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்களினால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த மனுக்களில் முன்வைக்கப்பட்ட உண்மைகளைப் பரிசீலித்த பிறகு, முடிவை அறிவித்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர், பிறப்புச் சான்றிதழ்களின் அசல் நகல்களைச் சமர்ப்பித்தல், பிறப்புச் சான்றிதழ்களை சமாதான நீதவான் ஒருவரால் சான்றளித்தல், அரசியலமைப் பின் 7ஆவது அட்டவணையின் கீழ் சத்தியப்பிரமாணம் தொடர்பான சிக்கல்கள் மற்றும் அவற்றை சரியான நேரத்தில் சமர்ப்பிக்கத் தவறியதன் அடிப்படையில் நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை மீண்டும் ஏற்றுக்கொள்ளுமாறு தேர்தல் அதிகாரிகளுக்கு தமது நீதிமன்றம் முன்னர் உத்தரவிட்டிருந்ததையும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த முடிவு தொடர்பாக உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கும்வரை தனது முடிவு அமுலில் இருக்கும் என்று பிரதம நீதியரசர் சுட்டிக்காட்டியுள்ளதுடன், அந்த உத்தரவுகளின்படி பிரதிவாதிகள் செயற்படுவார்கள் என்று தான் எதிர்பார்ப்பதாகவும் கூறியுள்ளார்.

## ஜனாதிபதி நிதிய...

அதில் தவறு எதுவும் இல்லை'' என்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜனாதிபதி நிதியத்திலிருந்து அரசியல்வாதிகள் உள்ளிட்ட தரப்பினருக்கு நிதி வழங்கியது தொடர்பாக வாக்குமூலம் அளிப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன நேற்று (21) குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகியிருந்தார்.

ஏழு மணிநேர நீண்ட விசாரணைகளின் பின்னர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திலிருந்து வெளியேறியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

''ஜனாதிபதி நிதியத்திலிருந்து மக்கள் பிரதிநிதிகளுக்கு பணம் பெற்றுக்கொடுத்தபோது தவறான தகவல்களை வழங்கியுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. அவ்வாறு தவறான தகவல்கள் வழங்கியது தொடர்பில், சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக தனித்தனியான ஆவணங்களும் இருக்கின்றன. அதனால், அவர்களின் ஆவணங்கள் அடங்கிய கோப்புகளை தனித்தனியாக பெற்றுக்கொண்டு அதுதொடர்பான விடயங்களை என்னிடம் பெற்றுக்கொண்டார்கள்.

என்னிடம் மாத்திரமல்லாமல், இதற்கு முன்னர் இருந்த சகல ஜனாதிபதிகள் அவர்களின் ஆட்சிக்காலத்தில் பெற்றுக்கொடுத்த நிதியில் ஏதாவது ஒழுங்கின்மை இடம்பெற்றுள்ளது என்பது தெரிந்தால் அவர்களை அழைத்து விளக்கம் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் குற்றப்புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

நிதி பெற்றுக்கொடுக்கும்போது அதில் ஒழுங்கின்மை ஏற்பட்டிருக்குமாக இருந்தால் அதுதொடர்பில் விசாரணை செய்வது சிறந்த விடயமாகும். அதில் தவறு எதுவும் இல்லை. அவ்வாறு ஒழுங்கின்மை ஏற்பட்டிருக்குமாக இருந்தால் நிதியை பெற்றுக்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் அல்லது அமைச்சரினூடாகவே இடம்பெற்றிருக்கும். ஜனாதிபதியினூடாகவோ அல்லது ஜனாதிபதி செயலகத்தினூடாகவோ இடம்பெற்றிருக்காது'' என்றார்.

## பாப்பரசர் பிரான்சிஸின்...

புனித பாப்பரசர் பிரான்சிஸின் அமைதி, இரக்கம் மற்றும் மனிதநேயம் மீதான அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பு உலகில் ஒரு அழியாத அடையாளத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அவரின் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரின் உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றை வெளியிட்டே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும், ''உலகளாவிய ரீதியில் தார்மீகத்தின் இருப்புக்கு வழிகாட்டியாகவும் அமைதி, நீதி மற்றும் இரக்கத்துக்காக ஆழமாகவும் கண்ணியமாகவும் குரல் கொடுத்த பரிசுத்தப் பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் மறைவுக்கு இலங்கை மக்கள் சார்பாக எனது இரங்கலை தெரிவிக்கிறேன்.

வரியவர்களுக்கான பரிசுத்தப் பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் மாறாத மனிதநேய நோக்கு உலகளாவிய ஒற்றுமைக்கான அவரது அயராத முயற்சிகள் மற்றும் அவரது ஆன்மீகத் தலைமைத்துவம் என்பன அனைத்து மதங்களையும் சேர்ந்த மில்லியன் கணக்கான மக்களின் இதயங்களைத் தொட்டுள்ளது.

புனித பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் நினைவுகள் இலங்கையிலும் சிறப்பான பக்தியுடன் அனுஷ்டிக்கப்படுகிறது. 2015 ஜனவரி மாதத்தில் நமது நாட்டுக்கு அவர் மேற்கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க விஜயம், பல வருடப் போருக்குப் பின்னர் இலங்கை மக்களை குணப்படுத்திய ஆன்மீக சிகிச்சை மற்றும் மதங்களுக்கு இடையேயான ஒத்துழைப்புக்கான தருணமாக என்றும் மக்களின் நினைவுகளில் நிலைத்திருக்கும்.

அவரது வருகை அமைதி, நம்பிக்கை மற்றும் சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்துக்கு விடுக்கப்பட்ட புதிய அழைப்பாக அமைந்திருந்தது. 1.7 மில்லியனுக்கும் கிட்டிய இலங்கை கத்தோலிக்க சமூகத்தினர், உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்கர்களின் ஈடுசெய்ய முடியாத இழப்புக்கான துயரத்தில் பங்கெடுத்துக்கொண்டுள்ளனர். மத வேறுபாடு இன்றி அமைதி, சகவாழ்வு மற்றும் மனித மாண்பை மதிக்கும் இலங்கையர்களின் நண்பராகவும் கடினமான காலங்களில் தார்மீக வழிகாட்டியாகவும் அவர் நினைவுகூரப்படுவார். இரக்கம், நீதி மற்றும் மதங்களுக்கு இடையேயான சகவாழ்வுக்கான அவரது முன்மாதிரியான வாழ்க்கை, எதிர்கால சந்ததியினருக்கு ஒரு புதிய முன்னுதாரணமாக அமையும். பரிசுத்தப் பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் நித்திய இளைப்பாற்றுக்காக பிரார்த்திக்கிறேன்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

## தபால்மூல வாக்களிப்பு...

இந்தத் தினங்களில் வாக்களிக்க முடியாதவர்கள் 28 மற்றும் 29ஆம் திகதிகளில் வாக்களிக்க முடியுமென அறிவித்திருந்தோம். இருந்தபோதும், தபால்மூல வாக்களிப்புக்கான திகதிகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, சகல அரச நிறுவனங்கள், பாடசா லைகள், பொலிஸ் மற்றும் இராணுவ முகாம்கள் உள்ளிட்ட சகல நிறுவனங்களிலும் எதிர்வரும் 24, 25, 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் தபால் மூல வாக்களிப்பு இடம்பெறும். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று 22, 23ஆம் திகதிகளில் தபால்மூல வாக்களிப்பு இடம்பெறாது.

இதேவேளை, கண்டியில் இடம்பெறும் கண்காட்சி பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் அதிகாரிகள் 8,000 பேர் வாக்களிப்பதற்காக கண்டியில் விசேட வாக்களிப்பு மத்திய நிலையமொன்றை அமைக்கவுள்ளோம். மேற்குறிப்பிட்ட நான்கு நாட்களில் அவர்கள் அங்கு வாக்களிக்க முடியும். அவர்களுக்காக தபால் வாக்குச் சீட்டுகள் கண்டி வாக்களிப்பு நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ள முப்படை யினர் பெயரிடப்பட்ட அதிகாரியொருவரின் முன்னிலையில் வாக்களிக்க முடியும்'' என்றார்.

## மைத்ரியின் வாக்குமூலம்...

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

''ஆறு வருடங்களுக்கு முன்னர் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. அப்பாவி கத்தோலிக்க மக்கள் இந்தத் தாக்குதல் சம்பவத்தினால் பாதிப்படைந்தார்கள். 2019ஆம் ஆண்டு அரசியல் அதிகாரத்தை இலக்கு வைத்து முன்னெடுக்கப்பட்ட அந்தத் தாக்குதலினூடாக அப்பாவி மக்களை பலியெடுத்தார்கள். தாக்குதலை மேற்கொண்ட குழுவினரை பயன்படுத்தி அதிகாரத்தையும் பெற்றுக்கொண்டார்கள். இன்று ஆறு வருடங்கள் நிறைவடைந்துவிட்டன. நாங்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன் முதலில் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளையே ஆரம்பித்தோம். ஆறு வருடங்கள் கடந்துவிட்டதால் அந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய அநேகமான அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்கள். சில சாட்சியாளர்கள் பல்வேறு இடங்களுக்கு சென்றிருந்தார்கள். ஒருசிலர் வெளிநாடு சென்றுள்ளார்கள். அதிகாரிகள் இடமாற்றம், வருடங்கள் கடந்துள்ளமை, தகவல்கள் தரவுகள் மாயமானமை, சில சாட்சியாளர்கள் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளமை, சில சாட்சிகள் பலவந்தமாக மூடிமறைக்கப்பட்டமையினால் பெரும் சவால்மிக்க கடினமான விசாரணைகளாக இது அமைந்திருந்தது.

ஆனால் நாங்கள் பின்வாங்கவில்லை. அந்த விசாரணைகளை ஆரம்பித்து, குறுகிய காலத்தில் குற்றப்புலனாய்வுத் திணைக் களத்தினால் அநேகமான சாட்சிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முன்னாள் ஜனாதி பதி மைத்ரிபால சிறிசேன, பிரதான சூத்திரதாரி யார் என்பது தனக்கு தெரியுமென்று தெரிவித்து அது தொடர்பான தகவல்களையும் நீதிபதியிடம் அறிவித்திருந்தார். ஆனால் அந்த விடயம் இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. அதனையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். எமது அதிகாரிகள் அதனை விசாரணைக்கு எடுத்துகொள்வார்கள் என்று நம்புகிறோம்.

அதேபோன்று, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி விசாரணைக் குழுவும் இருந்தது. அந்தக் குழுவினால் அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டிருந்தது. அந்த அறிக்கைகளை மூடிமறைக்க வேண்டிய அவசியமும் எங்களுக்கு இல்லை. அந்த அறிக்கை மக்களுக்குரியவையாகும். விசாரணைகளின்போது அந்த அறிக்கை சகலதும் மதிப்பாய்வு செய்யப்படும். விசாரணைகளின் அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்படும். அவற்றில் அநேகமான இரகசியத் தகவல்கள் இருந்தன. அதேபோன்று அநேகமான சாட்சிகள் வேண்டுமென்றே மூடிமறைக்கப்பட்டிருந்தன.

சாரா உயிரிழந்தாரா அல்லது காணாமல் போனாரா? என்பது தொடர்பிலும் சந்தேகம் இருந்தது. அதுதொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அவ்வாறான பல்வேறு விசாரணைகள் தற்போது வரையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, புதிய அரசாங்கத்தினூடாக இந்த விசாரணைகளை மீள ஆரம்பித்து சகல அறிக்கைகளையும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைத்து அதனூடாக மூடிமறைக்கப்பட்ட சாட்சிகளை மீண்டும் சேகரித்து, விசாரணைகளை முன்னெடுத்து அதிகாரிகளை மீண்டும் அழைத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே, ஈஸ்டர் தாக்குதலை மேற்கொண்ட சூத்திரதாரிகளுக்கு எதிராக சட்டத்தை செயற்படுத்தி அவர்களுக்கு அதிகபட்ச தண்டனையையும் பெற்றுக்கொடுப்போம். நீதியையும் நிலைநாட்டுவோம். உரிய நேரத்தில் அந்த விசாரணைகளின் முடிவுகள் வெளிப்படும். ஆறு வருடங்கள் கடந்திருந்தாலும் இந்தத் தாக்குதல் சம்பவத்தை மூடிமறைக்க இடமளிக்க மாட்டோம்.

நூறு வருடங்கள் கடந்தாலும் குற்றச்செயல்களுக்காக எந்தவொரு நபரையும் மன்னிக்க முடியாது. நீதியை நிலை நாட்டுவதற்காக மக்கள் வழங்கிய ஆணையை நிறைவேற்ற நாங்கள் தயாராக இருக்கிறோம்'' என்றார்.

## கத்தோலிக்க மக்களுக்கு...

ஏற்பட்ட அநீதி தொடர்பில் இதனைவிட சிறந்த முறையில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும்'' என்று சர்வஜன அதிகாரத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்தார்.

புதுவருடத்தில் கட்சி செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்து நேற்று (21) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

''துரதிர்ஷ்டவசமான ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் இதேபோன்றதொரு தினத்திலேயே இடம்பெற்றது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரியை தேடிகண்டுபிடித்து மக்கள் முன் நிறுத்துவதாக ஜனாதிபதி வாக்குறுதி வழங்கியுள்ளார். எனவே, இந்த நாட்டின் அரசியலில் யாருக்கு எந்த பொய்யை கூறினாலும் அரசியல் நோக்கங்களுக்காக எவராலும் பொய் கூற முடியுமென்று நான் கருதவில்லை.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தினூடாக அரசியல் ரீதியான கொலை இடம்பெற்றுள்ளதாக அவர் சித்தரிக்கிறார். ஆனால், அவரின் மனச்சாட்சிக்கு எதிராகவே இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார் என்பது எனக்கு தெரியும். இதன் யதார்த்தம் என்னவென்பதை அவர் அறிவார். கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட்ட அநீதி தொடர்பில் நீதியை நிலைநாட்ட வேண்டும். அரசியலை பயன்படுத்தி மிகக் கீழ்மட்ட நிலைமையை ஏற்படுத்தி மக்களை நெருக்கடிக்குள்ளாக்கி செயலாற்றுவது தொடர்பில் பெரும் கவலையை தெரிவித்துக்கொள்கிறோம்'' என்றார்.

## சட்டத்தை திருத்த...

செயற்பட வேண்டும். அத்துடன் ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் கத்தோலிக்க ஆயர்கள் சபையினால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை விரைந்து நடைமுறைப்படுத்த ஜனாதிபதி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்கு நீதிகோரி நேற்று (21) கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

''ஆறு வருடங்களுக்கு முன்னர் கொழும்பு கொச்சிக்கடை தேவாலயம், கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்டியன் தேவாலயம், மட்டக்களப்பு சியோன் தேவாலயம் மற்றும் கொழும்பிலுள்ள மூன்று பிரதான ஹோட்டல்கள் ஆகிய இடங்களில் இடம்பெற்ற முழு நாட்டையும் உலுக்கிய பயங்கரவாதத் தாக்குதல் சம்பவங்களினால் எமது சகோதரர்களான இலங்கையர்கள் 225 பேருக்கும் அதிகமானவர்களும் சுற்றுலா ஹோட்டல்களில் தங்கியிருந்த 45 பேருக்கும் அதிகமானவர்களும் உயிரிழந்தனர்.

அத்துடன் 500க்கும் அதிகமானவர்கள் காயங்களுக்குள்ளாகியமை மற்றும் பல்வேறு உடல் குறைபாடுகளை சந்தித்ததனூடாக நாம் சகலரும் அனுபவித்த துரதிர்ஷ்டவசமான அந்தச் சம்பவத்தை நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். வேதனைமிக்க, பயங்கரமான செயற்பாட்டினால் பாதிக்கப்பட்ட, தமது அன்புக்குரியவர்களை இழந்து இன்றும் தனிமையில் அல்லலுறும் எமது உறவினர்களுக்கு எங்களின் ஆழ்ந்த கவலையை தெரிவித்துக்கொள்கிறோம். அவர்கள் அனுபவிக்கும் மன கஷ்டங்களையும் வேதனையையும் எம்மால் ஈடு செய்ய முடியாது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். இருந்தபோதும் எங்களால் முடிந்தளவு அவர்களை ஆறுதல் படுத்துவதற்கு எடுக்கப்படும் இந்த முயற்சியினூடாக அவர்களின் கஷ்டங்களையும் வேதனையையும் தனிமையையும் முடிந்தளவு குறைத்துக்கொள்ளக்கூடியதாக இருக்குமென நம்புகிறோம்.

இந்த பேரழிவு சம்பவத்தின் பின்னணியில் இருந்தவர்களை தேடிக்கண்டுபிடித்து அவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதாக ஒப்புக்கொண்டே உணர்ச்சிகளுக்கு இடம்கொடுக்காமல் நிலைமையை பொறுமையாக கோரியிருந்தேன். இதுபோன்ற பேரழிவை ஒரே நேரத்தில் பல்வேறு இடங்களில் மேற்கொள்வதற்குத் திட்டமிடுவதற்காக வெளிப்படையாக செயற்பட்ட பயங்கரவாதிகளை விட பலம் படைத்த வேறு குழுவின் ஒத்துழைப்பு அவசியம் என்பதை புரிந்துகொண்டதாலேயே அவ்வாறான கோரிக்கையை முன்வைத்தேன்.

அதேபோன்று வேறு பலம்படைத்த குழுவினரின் ஒத்துழைப்பு எதுவுமின்றி இந்த பேரழிவை ஏற்படுத்துவது அடிப்படைவாதிகள் ஏழு பேருக்கு இலகுவான விடயமாக இருந்திருக்காது. அன்றிலிருந்து இன்றுவரை இடம்பெற்ற அந்த சம்பவத்தை முறையாக விசாரணை செய்து இதன் பின்னணியில் இருக்கும் சகல மறைக்கப்பட்ட காரணங்களையும் தேடிக்கண்டுபிடிக்குமாறே சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் தொடர்ந்து கோரிவருகிறோம்.

முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அதன் அறிக்கையில் இந்தச் சம்பவம் தொடர்பான விளக்கத்தில் இரு விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியிருந்தது.

முதலாவது விடயம், இந்தச் சம்பவத்தில் நேரடியாக தொடர்புபட்ட சஹ்ரான் மற்றும் இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கும் இடையில் இருக்கும் பிணைப்பு மற்றும் அதன் பின்னணியை தேடி கண்டுபிடித்து அதற்கு மாற்றுத்திட்டத்தை முன்வைக்கக்கூடிய யோசனையை முன்வைத்தலாகும்.

இரண்டாவது, இந்தச் சம்பவம் தொடர்பில் இந்திய உளவுத்துறையிலிருந்து முன்னறிவிப்பு கிடைத்தும் அதுதொடர்பில் கவனம் செலுத்தாது செயற்பட்ட அரசியல் தலைவர்கள், பொலிஸ் இராணுவ அதிகாரிகள், புலனாய்வை வழிநடத்துபவர்களின் பொறுப்பை நிறைவேற்றாமைக்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக பரிந்துரைத்தலாகும். இருந்தபோதும் இந்தச் சம்பவத்தின் பின்னணியில் இருந்தவர்கள் மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய வேறு அதிகார சக்தி தொடர்பில் தேடிப்பார்த்து அதுதொடர்பில் செயற்பட வேண்டியவிதம் தொடர்பில் அந்த ஆணைக்குழுவினால் பரிந்துரை முன்வைக்கமுடியாமல் போயிருந்தது. இவ்வாறு அவர்களின் கவனத்துக்கு எட்டாத விடயங்களில் சாரா ஜெஸ்மினுக்கு என்னவானது, சொனிக் சொனிக் என்ற புனைப்பெயரில் ஆஜரான சாட்சியாளர் யார் என்பதை அடையாளம் கண்டு அவரிடம் விசாரணை செய்தல், இந்தத் தாக்குதல் சம்பவத்தை ஐ.எஸ். தாக்குதல்தாரிகள் மீது திணிப்பதற்கான காரணம் என்ன, வவுணதீவு பொலிஸ் அதிகாரிகள் இருவர் கொலை செய்யப்பட்டமையின் உண்மையை மூடிமறைக்க உயர் பொலிஸ் அதிகாரி செயற்பட்ட விதம், ஏழாவது சந்தேகநபரான ஜெமீல் மற்றும் புலனாய்வுத் துறையினருக்கு இடையில் இருந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பான உண்மையை தேடிப்பார்த்தல் போன்ற விடயங்கள் இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கின்றன.

ஆனால், அந்த விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு அப்போதைய அரசாங்கத்தால் ஒத்துழைப்பு வழங்கப்படவில்லை. இந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து மக்கள் மயமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையினூடாக அந்த அறிக்கையின் பரிந்துரைகளை மூடிமறைக்க ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் ஆட்சிக்குவந்த ஒருசில அரசாங்கங்கள் செயற்பட்டமை இன்னும் எம்முள் சந்தேகத்தை உருவாக்கும் இன்னுமொரு விடயமாக அமைந்துள்ளது. இவ்வாறான பல விடயங்கள் இந்தத் தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் கண்ணுக்கு தெரியாத உருவம் இருக்கிறது என்ற சந்தேகம் எழுகிறது. இந்த அறிக்கையின் ஒருசில பகுதிகள் வெளியிடப்பட்டிருந்தாலும் ஏனையவற்றை பிரபல்யப்படுத்தாமலிருக்க வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளன. அதனூடாக அந்த அறிக்கையை பொதுமக்களுக்கு தெரியாமல் இரகசியமாக வைத்துக்கொள்ள ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கங்களும் முயற்சித்தன. கடந்த ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்க ஆயர் கள் சபையில் பிளவை ஏற்படுத்தி மிக சூட்சும மாக இந்தப் பிரச்சினையிலிருந்து தப்பிக்க முயற்சித்தார்கள். ஆனால் நான் உள்ளிட்ட கத்தோலிக்க ஆயர் சபை இந்த விடயத்தில் ஒரே நிலைப்பாட்டிலேயே இருக்கிறோம்.

அதாவது, இந்தத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் விரைவாக தீவிர விசாரணைகளை முன்னெடுக்கும் நிலைமை அன்றிலிருந்து இல்லாமல் இருந்து வருவதால் மிகவும் தீவிரமாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பொலிஸாரினூடாக மேலும் அக்கறையுடன் இந்த விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடாகும்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பான உண்மையை மூடிமறைக்க கடந்த அரசியல் தலைமைத்துவங்கள் எடுத்த முயற்சிகளை இன்றும் நடைமுறைப்படுத்தி, அந்த தோற்கடிக்கப்பட்ட அரசியல் அதிகார சக்திகளுக்கு அடிபணிந்த பல்வேறு அரச நிறுவனங்களால் செயற்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்பது கவலைக்குரிய விடயமாகும்.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் அப் போதைய சட்ட மா அதிபராக செயற்பட்ட தப்புல தி லிவேரா, இந்தச் சம்பவத்தின் பின்னணியில் பெரும் சூழ்ச்சி இருப்பதாக கூறியிருந்தாலும் அதனை துளியளவும் கவனத்தில் கொள்ளாமல் அவருக்கு பின்னர் பதவிக்கு வந்த சட்ட மா அதிபர் உள்ளிட்ட சட்ட மா அதிபர் திணைக்களம் இந்த சம்பவம் தொடர்பான பின்னணி, சட்ட நடவடிக்கைகள் தொடர்பான மந்த செயற்பாடு ஆட்சியாளர்களுடன் நெருங்கி செயற்பட்டமையானது இன்றும் நிலவுவதால் தற்போதைய அரசாங்கத்தில் எந்தளவு தூரம் இந்தச் செயற்பாடுகள் பலமிக்கதாக இருக்கும் என்ற கேள்வி நிலை இருக்கிறது. இது தொடர்பில் தற்போது இடம்பெற்ற விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படுத்தவும் ஒருசில அரசியல் தலைமைகள் செயற்படுகின்றமையும் தெரியவருகிறது.

அவ்வாறான முயற்சிகளை நிராகரிக்கிறோம். இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மிகப் பொறுப்புடன் செயற்பட்டாலும் அதனை வழிநடத்த உயர் அதிகாரிகளை நியமித்திருந்தாலும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஒருசில அதிகாரிகளின் மந்தப் போக்கினால் அந்தச் செயற்பாடுகள் பல்வேறு இடை யூறுகளின் மத்தியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவசியமான வகையில் அரசியலமைப்பு மற்றும் சட்ட மாற்றங்களை செய்து நாட்டை சீர்குலைத்த சில செயற்பாடுகளை வெளிப்படுத்தி, மனித படுகொலைகள், காணாமலாக்கல், வெள்ளை வேன் கடத்தல், வதைகூடங்கள், பாதாள குழு செயற்பாடுகள், தனியார் இராணுவங்களை உருவாக்கி வரலாற்று கரையை ஏற்படுத்தியவர்களை அடையாளம் கண்டு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்காகவே மக்கள் இந்த அரசாங்கத்துக்கு ஆணை வழங்கினார்கள்.

நடைமுறையிலுள்ள சட்ட ஒழுங்குகளையும் நீதியை நிலைநாட்ட முடியவில்லை என்றால் அந்த சட்ட ஒழுங்குகளை திருத்துவதற்கு தைரியத்துடன் செயற்பட வேண்டும். அதற்காக மக்களும் அவர்களின் முழு ஆதரவையும் வழங்கியிருக்கிறார்கள். எனவே, நாட்டில் இடம்பெற்ற சகல ஜனநாய கத்துக்கு விரோதமான மற்றும் அரசியல் ரீதியான பயங்கரவாதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய செயற்பாடுகளிலிருந்தும் எமது சமூகத்தை விடுவிக்குமாறே ஜனாதிபதியிடம் கோருகிறோம். நீர்கொழும்பு, கட்டுவாப்பிட்டியில் வைத்து ஜனாதிபதி ஒப்புக்கொண்டது போன்றே இந்தத் தாக்குதல் சம்பவத்தின் பின்னணியை மூடிமறைக்க இடமளிக்காமல் உண்மையை தேடிக் கண்டுபிடித்து இதனுடன் தொடர்புடைய சகலரையும் சட்டத்தின் முன்கொண்டுவருவீர்கள் என்று முழுமையாக நம்புகிறோம்.

ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பான ஜனக் தி சில்வாவின் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை பகிரங்கப்படுத்தல், இந்தச் சம்பவம் தொடர்பில் மேற்பார்வை செய்து வழக்கு விசாரணைகளை முன்னெடுப்பதற்கான முழு அதிகாரம் கொண்ட சுயாதீன மேன்முறையீட்டு அலுவலகத்தை ஸ்தாபித்தல், இதன் பின்னணியில் செயற்பட்ட சகலரையும் தேடிக்கண்டுபிடித்து உண்மையை நாட்டுக்கு வெளிப்படுத்தி சம்பந்தப்பட்ட வர்களை பாரபட்சமின்றி சட்டத்தின் முன் நிறுத்துதல், 2019 செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்தல், இராணுவ புலனாய்வு மற்றும் சஹ்ரானுக்கும் இடையிலான தொடர்பு மற்றும் செனல் 4 நிறுவனத்தின் அறிக்கை தொடர்பில் விரிவான விசாரணைகளை முன்னெடுத்து ஆசாத் மௌலானா என்பவர் தொடர்பில் ஆழமான விசாரணைகளை முன்னெடுப்பது தொடர்பில் ஜனாதிபதி விரைவாக கவனத்தை செலுத்த வேண்டும்.

இமாம் அறிக்கையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும், இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய சகல இரகசிய சூழ்ச்சிகள் மற்றும் அதற்கு ஆதரவாக செயற் பட்ட கீழ்மட்ட இராச்சியத்தை நாட்டிலிருந்து நீக்குவதற்கு சட்டங்களை நீக்கி சட்டத்தை நிலைநாட்டி மனித உரிமைகளை பாதுகாத்தல் தொடர்பிலும் ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும். ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்துக்கு பின்னரும் முன்னரும் இடம்பெற்ற ஒவ்வொரு இனவாத செயற்பாடுகள் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும்'' என்றார்.

இதேவேளை, கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்திலும் கட்டுவாப்பிட்டி புனித செபஸ்டியன் தேவாலயத்திலும் ஈஸ்டர் தாக்குதல்களில் உயிரிழந்த 167 பேரை "விசுவாச சாட்சிகளாக" பெயரிடப்பட்டுள்ளதாக கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அறிவித்தார்.

# பூமி போலவே K2-18b கோளில் உயிர் வாழலாமென கண்டுபிடித்தது எப்படி?



## - விஞ்ஞானி நிக்கு மதுசூதன் பேட்டி -





பூமியை விட இரண்டரை மடங்கு பெரியதும் பூமியிலிருந்து 700 டிரில்லியன் மைல்கள் (சுமார் 1,127 இலட்சம் கோடி கி.மீ. ) தொலைவில் அமைந்துள்ளதுமான இந்தப் புறக்கோள்தான் இன்று உலகளவில் பேசுபொருளாக இருக்கிறது. இந்தப் புறக்கோளில் உயிர்கள் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் 99.7% இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

அதுவே, இந்தப் புறக்கோள் (சூரியக் குடும்பத்துக்கு வெளியே உள்ள கோள்) குறித்து இன்று அதிகம் பேசப்படுவதற்குக் காரணம். இந்தப் புறக்கோளில் உயிர்கள் இருக்கலாமென்று விஞ்ஞானிகள் கருதும் அளவுக்கு அப்படி என்ன கிடைத்தது? இந்தப் புறக்கோளில் என்ன இருக்கிறது?

இதுகுறித்த ஆய்வை மேற்கொண்ட குழுவை வழிநடத்தியவரும் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் வான் இயற்பியல் மற்றும் புறக்கோள் அறிவியல் விஞ்ஞானியுமான பேராசிரியர் நிக்கு மதுசூதன், தனது கண்டுபிடிப்புகள் குறித்து பிபிசி தமிழிடம் பகிர்ந்துகொண்டார். அவரது நேர்காணல் இங்கே.

**Q விண்வெளி அறிவியல் மீதும் குறிப்பாக, பூமியைத் தாண்டி வாழும் உயிர்களுக்கான தேடல் மீதும் உங்களுக்கு எப்படி ஆர்வம் வந்தது? உங்கள் இளம் வயதில் இதன் மீது ஆர்வம் ஏற்படக் காரணமாக இருந்தது எது?**

**பதில்:** குறிப்பாக, விண்வெளி அறிவியல் என்றில்லை. ஆனால், அடிப்படை அறிவியல் மீது மிகவும் ஆர்வமாக இருந்தேன். அணு இயற்பியல், துகள் இயற்பியல் அல்லது நுண் இயற்பியல், வான் இயற்பியல் அனைத்தின் மீதும் ஆர்வம் கொண்டிருந்தேன். ஆகவே, இவற்றில் புதிய துறைகள் உருவாக வாய்ப்புள்ளவற்றைப் பகுப்பாய்வு செய்து கொண்டிருந்தேன்.

அப்படித் தேடிக்கொண்டிருக்கும்போது வான் இயற்பியலில் கருந்துளை பற்றிக்கூட ஆய்வு செய்துள்ளேன். உயர் ஆற்றல் வான் இயற்பியலில் ஆய்வு செய்யத் தொடங்கியிருந்தபோது புறக்கோள்கள் மீதான ஆர்வம் அதிகரித்தது. அப்படித்தான் இந்தத் துறைக்கு மாறினேன்.

**Q உங்கள் அறிவியல் ஆய்வுப் பயணத்தில் வேற்றுக்கிரகங்களில் உயிர்கள் இருக்கலாம் என்பது பற்றிய பார்வை எப்படி மாறியுள்ளது? அது உண்மையில் இருக்கலாம் என்று எப்போதுமே நம்பினீர்களா?**

**பதில்:** தரவுகளின்படி பார்த்தால் ஆயிரக்கணக்கான புறக்கோள்கள் இருப்பது நமக்குத் தெரியும். பிற நட்சத்திரங்களைச் சுற்றியும் கோள்கள் உள்ளன. இந்த எண்ணிக்கையை வைத்துப் பார்த்தாலும் அதில் எங்காவது உயிர்கள் இருக்கலாமென்று கணிப்பது மிக எளிது. அதற்கான ஆதாரம் நம்மிடம் இல்லை.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு சூரிய மண்டலத்துக்கு வெளியே கோள்கள் இருப்பது பற்றி நமக்குத் தெரியாது. சூரிய மண்டலம் தனித்துவமானதென்று மக்கள் கருதினர். வேறு கோள்கள் இல்லையென நினைத்தனர். ஆனால், இப்போது பெரும்பாலான நட்சத்திரங்களைச் சுற்றி கோள்கள் இருக்கலாமென்று நமக்குத் தெரியும்.

இந்த எண்ணிக்கையை வைத்தே அதில் எங்காவது உயிர் இருக்கலாமென யூகிக்கலாம். இன்னும் அதற்கான ஆதாரம் நம்மிடம் இல்லை. ஆனால், இந்தத் துறையில் இதுவரை நான் செய்த ஆய்வுகள், அவதானித்த தரவுகள் அந்த ஊகத்துக்கு வலுச்சேர்க்கின்றன.

அதுமட்டுமன்றி, நம்மிடம் அதைக் கண்டறிய உதவும் தொழில்நுட்பங்களும் இருக்கின்றன. அது மிக முக்கியமான விஷயம். ஒருவேளை பிரபஞ்சத்தில் வேறு எங்காவது உயிர்கள் இருக்கலாம். ஆனால், அதைக் கண்டறியும் தொழில்நுட்பம் இல்லையென்றால் அப்படி யூகிப்பதில் எந்த அடிப்படையும் இல்லை. அதற்கு எந்த ஆதாரமும் இருக்காது.



இப்போது கிடைத்துள்ள ஆய்வு முடிவு முக்கியமானது. இது மிகப்பெரிய தருணம். மனித வரலாற்றில் முதன்முறையாக ஒரு குறிப்பிட்ட கோளில் உயிர் இருக்கிறதா இல்லையா என்பதைக் கண்டறிய உதவும் திறன் நம்மிடம் இருக்கிறது. அதன் உதவியுடன் ஒரு கோளை ஆய்வு செய்து உயிர் இருப்பதற்கான சில குறிப்புகளைக் கண்டறிந்துள்ளோம்.

இத்தகைய ஆய்வை இன்னும் அதிகமாக புறக்கோள்களில் செய்வதன் மூலம் பூமியைத் தாண்டி உயிர்கள் இருப்பதற்கான ஆதாரத்தைக் கண்டுபிடிக்கலாம். அது இரு ஆண்டுகள், பத்து ஆண்டுகள் அல்லது இருபது ஆண்டுகளில் என எதிர்காலத்தில் எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம். ஆனால், அந்தச் சூழல் நமக்கு முன்பு இருக்கவில்லை. அதை ஒரு குறிப்பிடத்தக்க மாற்றமாகவே நான் பார்க்கிறேன்.

**Q உங்கள் K2-18b புறக்கோளுக்கு வருவோம். பூமியைத் தாண்டி உயிர்கள் இருப்பதை உறுதி செய்ய இந்தக் குறிப்பிட்ட புறக்கோள் உதவும் என்பதில் எவ்வளவு நம்பிக்கையுடன் இருக்கிறீர்கள்?**

**பதில்:** அறிவியல் கோணத்தில் கண்டிப்பாக ஆதாரங்கள் வேண்டும். ஆகவே, இப்போது அதை மிக உறுதியாகக் கூற முடியாது. இப்போதுள்ள தரவுகளும் நாங்கள் ஏற்கனவே வெளியிட்ட கடந்த பல ஆண்டு கால ஆய்வில் கிடைத்த அனைத்து தரவுகளும் எங்களுக்களிக்கும் விளக்கம், இந்தப் புறக்கோளில் உயிர்கள் இருக்கலாம் என்பதே. உயிர் வாழ ஏதுவான பெருங்கடலும் அதில் உயிர்களும் இருக்கலாம் என்பதே.


இப்போதைக்கு அதுதான் சரியான விளக்கமாகவுள்ளது. ஆனால், நாம் திறந்த மனதுடன் இருக்க வேண்டும். இது உறுதியல்ல, ஆரம்பகட்ட ஆய்வுகள் தான். இதேவேளை, உண்மை அப்படியல்ல என மேலதிக ஆய்வுகள் கூறலாம். ஆனால், சாத்தியக்கூறுகள் அதிகம் இருப்பதாகவே நான் நினைக்கிறேன். அது உண்மையா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

**Q உங்கள் K2-18b புறக்கோளில் உயிர்கள் இருப்பதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான (99.99994%) ஆதாரங்களைத் திரட்ட என்ன திட்டம் வைத்துள்ளீர்கள்? பூமியைத் தாண்டி உயிர்கள் உள்ளனவா என்பதைக் கண்டுபிடிக்கும் பயணத்தில் நாம் இன்னும் எவ்வளவு தொலைவில் இருக்கிறோம்?**

**பதில்:** நமக்கு இப்போது கிடைத்துள்ள தரவுகளே இதுவரை கிடைக்காத ஒன்றுதான். துகள் இயற்பியலில் ஹிக்ஸ் போசானை இதற்கு உதாரணமாகக் கூறலாம். பெரிய பெரிய கண்டுபிடிப்புகள் மிகவும் நுண்ணிய அளவில் கண்டறியப்படுவதனூடாகவே தொடங்குகின்றன. இயற்பியலின் பல பிரிவுகளிலும் இதே கதைதான். இங்கு அப்படித்தான் நடக்கிறது.

இப்போதுள்ள தொழில்நுட்பங்களின் வாயிலாக சிறு ஆதாரம் கிடைத்துள்ளது. அது மேலும் அதிகமாக ஆய்வு செய்யத் தூண்டுகிறது. ஆகவே, கூடுதலாகக் கவனஞ்செலுத்துகிறோம். இப்படியாக முழு திறனையும் பயன்படுத்தும்போது, காலப்போக்கில் சிக்மா ஃபைவ் (99.99994%) அளவுக்கான ஆதாரம் கிடைக்கும்.

ஆரம்பத்தில் நாங்கள் டைமெதைல் சல்ஃபைடு இருக்குமென எதிர்பார்க்கவில்லை. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கேட்டிருந்தால் இன்னும் கூடுதல் நேரம் வேண்டுமென்று சொல்லியிருப்போம். ஆனால், 2023இல் ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியில் இந்தப் புறக்கோளை 1-5 மைக்ரான் என்ற அளவில் கண்காணித்த சிறிது நேரத்திலேயே முதல் தடவையாக கரிம மூலக்கூறுகள் அடங்கிய வேதிமங்களைப் பார்த்தோம். இது ஆச்சரியமாக இருந்தது.



ஆனால், அந்தக் கோளின் வளிமண்டலத்தில் அவை அதிகமாக இருப்பதே அவற்றை எளிதாக நாங்கள் கண்டறியக் காரணம். அதோடு, மிகவும் சிறிய அளவில் டைமெதைல் சல்ஃபைட் இருப்பதற்கான தரவுகள் கிடைத்தன. அது மிகச் சிறிய சிக்னலாக இருந்தது. அது குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்பு இல்லையென்றாலும் எங்களை மேற்கொண்டு ஆய்வு செய்யத் தூண்டுவதற்கு போதுமானதாக இருந்தது.

பிறகு நாங்கள் மீண்டும் ஆய்வு செய்தோம். இந்த முறை 5-10 மைக்ரான் என்ற அளவில் வைத்து புறக்கோளை அவதானித்தோம். அதன் மூலம் சிக்மா த்ரீ(Sigma Three) அளவுக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. ஒரு கோளை தொலைநோக்கியில் ஆராயும்போது, அதில் உயிர் இருப்பதற்கான அடையாளம் தென்படுமென்று நான் கனவில்கூட நினைத்துப்பார்த்ததில்லை.

ஆகவே, நாம் ஏற்கனவே கணிசமான ஆதாரங்களைப் பார்க்கிறோம் என்பதால் இதுவே முக்கியமான முன்னேற்றம்தான். இதோடு, இனி வரும் நாட்களில் இந்தத் தரவுகளை மேலும் வலுவாக உறுதி செய்ய முடிகிறதா என்பதைத் தெரிந்துகொள்ள இரண்டு அல்லது மூன்று அவதானிப்புகளை மேற்கொள்வோம். அதற்கு வெகு காலம் எடுக்காது. ஒரு சில ஆண்டுகளில் தெரிந்துவிடும்.

**Q உங்கள் K2-18b கோளில் டைமெதைல் சல்ஃபைட், டைமெதைல் டைசல்ஃபைட் அபரிமிதமாகக் காணப்படுகிறது. நீங்களும் உங்கள் ஆய்வுக் கட்டுரையில், வருங்காலத்தில் இதை மீதேன் அதிகமுள்ள வளிமண்டல மாதிரிகளின் மூலம் பரிசோதனைகளைச் செய்துபார்க்கவுள்ளதாகக் கூறியுள்ளீர்கள். உயிர்கள் இல்லையென்றால் மீதேன் உற்பத்தி தொடர்ச்சியாக இருக்க வாய்ப்பில்லை என்பது நமக்குத் தெரியும். இதனடிப்படையில் பார்க்கும்போது 99.99994% நிச்சயமாக உயிர்கள் இருக்க வாய்ப்புள்ளது என்ற யூகத்துக்கு வர முடியுமா?**

**பதில்:** இதுவொரு சுவாரஸ்யமான கருத்து. நிச்சயமாக மீதேன் உற்பத்தி உயிர்களின் இருப்புடன் பூமியில் தொடர்புபடுத்தப்படுகிறது. இந்தக் கோளிலும்கூட அங்கு வாழக்கூடிய உயிர்கள் மீதேன் உற்பத்திக்குக் காரணமாக இருக்கலாம். மீதேன் இருப்பென்பது நிச்சயமாக சிக்மா 5 அளவுகோலை எட்டுவதற்கான ஆதாரம்தான். அதில் சந்தேகமே கிடையாது. இருந்தாலும், நாங்கள் அதை இன்னும் வலுவாக உறுதி செய்துகொள்ள முயல்கிறோம்.



நாம் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும். ஏனெனில், இந்தப் புறக்கோளுடைய வளிமண்டலத்தின் பெரும்பகுதி, பூமியில் இருப்பதைப் போன்ற நைட்ரஜன் மிகுதியுடைய ஒன்றல்ல. மாறாக, அது ஹைட்ரஜன் மிகுதியாகக் கொண்ட வளிமண்டலம். அவ்வளவு ஹைட்ரஜன் இருக்கும்போது உயிர்களே இல்லாமல் வேறு காரணிகளின் மூலமாகவும் கூட மீதேன் உற்பத்தி செய்யப்பட வாய்ப்பிருக்கலாம்.

ஆகவே, அத்தகைய உயிர்களற்ற காரணியால் உற்பத்தியான மீதேனை உயிர்கள் இருப்பதற்கான சான்றாகக் கருதிவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறோம். இதன் காரணமாகவே உயிர்கள் இருந்தால் நிச்சயமாக மீதேன் உற்பத்தி இருக்குமென்றாலும், மீதேன் இருப்பதாலேயே இந்தக் குறிப்பிட்ட புறக்கோளில் உயிர்கள் இருக்கலாமென்று சொல்லிவிட முடியாது.

ஆனால், இந்தக் கோளில் கண்டறியப்பட்ட டி.எம்.எஸ் இன் (டைமெதைல் சல்ஃபைட்) இருப்பு அதிலிருந்து வேறுபட்டது. அதிகளவில் வளிமண்டலத்தில் அது காணப்படுவது, உயிர்கள் இல்லாமல் சாத்தியமில்லை. இருந்தாலும், திறந்த மனதுடன் வேறு காரணங்களும் இருக்கக்கூடுமா என்பதை ஆய்வு செய்து வருகிறோம்.

**Q உங்கள் டைமெதைல் சல்ஃபைடோ அல்லது டைமெதைல் டைசல்ஃபைடோ நேரடி மீதேன் அல்ல. மாறுபட்ட வடிவத்தில் நடக்கக்கூடிய மீதேன் உற்பத்தி தானே! அதோடு, ஹைட்ரஜன் மிகுதியாகக் கொண்ட வளிமண்டலம் என்பதால் உயிர்களற்ற வேறு காரணங்களால்கூட இந்த வேதிமங்கள் உற்பத்தியாகியிருக்கலாம் அல்லவா?**

**பதில்:** ஆம், இந்த வேதிமங்களை உயிர்களற்ற சூழலில் குறைந்தளவில் உற்பத்தி செய்ய முடியுமென்பதை ஆய்வுகள் நிரூபித்துள்ளன. ஆனால், இந்தப் புறக்கோளில் இவற்றின் அளவு அதீதமாக உள்ளது. அங்கு இந்த வேதிமங்கள் பூமியில் இருப்பதைவிட ஆயிரம் மடங்கு அதிகமாக உள்ளது. இவ்வளவு பெரிய உற்பத்தி உயிர்கள் இல்லாமல் நடக்க வாய்ப்பில்லை என்பதுதான் விஷயம். கோட்பாட்டு ஆய்வுகள், இந்த அளவுக்கு இவை இருக்க வேண்டுமெனில், அதற்கு குறைந்தபட்சம் 20% உற்பத்தியேனும் உயிர்களிடம் இருந்து வரவேண்டுமெனக் கூறுகின்றன.

அதனால்தான், இதைச் சரியான பாதையாகக் கருதுகிறோம். இருந்தாலும், நமக்குத் தெரியாத விஷயங்களும் இருக்கின்றன. எனவே, வேறு புதிய சாத்தியங்களும் இருக்கலாமென்ற கோணத்திலும் இதை ஆராயவேண்டியுள்ளது.

**Q நீங்கள் வேறு ஏதேனும் புறக்கோள்களை ஆராய்ந்து கொண்டிருக்கிறீர்களா? இதேபோன்ற பிற ஹைஷன் கோள்களின் வளிமண்டலங்களுடன் இதன் தரவுகளை ஒப்பிடுவது இந்த வாயுக்களின் உயிரியல் மற்றும் உயிரியல் அல்லாத உற்பத்திக் காரணிகளை வேறுபடுத்திப் பார்க்க உதவுமா?**

**பதில்:** நிச்சயமாக உதவும். வேறு சில கோள்களிலும் அத்தகைய ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறோம். அதில் சிலவற்றின் தரவுகள் கைவசம் உள்ளன. அவற்றையும் ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். ஆனால், இன்னும் வெளியிடப்படவில்லை என்பதால் அவை குறித்து விரிவாகப் பேச இயலாது.

**Q ஒருவேளை, K2-18b புறக்கோளில் உயிர்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டால், அந்த உயிர்கள் பூமியில் உள்ள உயிர்களை ஒத்த அடிப்படையைக் கொண்டிருக்க வாய்ப்புள்ளதா அல்லது முற்றிலும் மாறுபட்ட ஒன்றாக இருக்குமா?**

**பதில்:** அங்கு என்ன மாதிரியான உயிர்கள் இருக்கலாம் என்பது குறித்து நம்மால் உறுதியாகச் சொல்ல முடியாது. ஆனால், பூமியில் வாழக்கூடிய எளிய, நுண்ணிய உயிர்கள் இந்த வேதிமங்களை உற்பத்தி செய்வதால், அதேபோன்ற நுண்ணுயிர்களே இந்தப் பெருங்கடல்சூழ் புறக்கோளிலும் இருக்கக்கூடுமென்று நாம் யூகிக்கலாம்.

ஆனால், அதைத் தாண்டி எப்படியான உயிர்கள் இருக்கலாம் என்பதைக் கணிப்பது சாத்தியமில்லாதது. இப்போதைக்கு அதில் எந்தக் கருத்தையும் நம்மால் கூற முடியாது.

***- இது, பிபிசிக்காக கலெக்டிவ் நியூஸ்ரூம் வெளியீடு.***

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 ஏப்ரல் 22 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# புனித பாப்பரசரின் மறைவு

புனித பாப்பரசர் பிரான்சிஸ் திங்கட்கிழமை வாடிகனில் உள்ள இல்லத்தில் உயிரிழந்தார். இறக்கும்போது அவருக்கு வயது 88.

அவர் காலமானதை வாடிகன் உறுதிப்படுத்தியுள்ளது. பாப்பரசர் பெனடிக்ட் XVI பதவி விலகிய பின்னர், 2013-ஆம் ஆண்டு மார்ச் மாதம் கத்தோலிக்க திருச்சபையை வழிநடத்த கார்டினல் ஹோர்ஹே மரியோ பர்கோலியோ எனும் இயற்பெயரைக் கொண்ட இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

“அவரது முழு வாழ்க்கையும் கர்த்தருக்கும் அவருடைய திருச்சபைக்கும் சேவை செய்வதற்காக அர்ப்பணிக்கப்பட்டது” என்று கார்டினல் ஃபாரெல் கூறுகிறார்.

ஆயிரக்கணக்கான மக்களுக்கு “ஈஸ்டர் வாழ்த்துகள்” தெரிவிக்க புனித பீட்டர்ஸ் சதுக்கத்தில் அவர் தோன்றிய 24 மணி நேரத்துக்குள் மரணம் நிகழ்ந்துள்ளது. சக்கர நாற்காலியில் வந்த பாப்பரசரின் பல்கனியில் இருந்தபடி, ஆரவாரம் செய்த கூட்டத்தை நோக்கி கையசைத்து, “அன்புள்ள சகோதர சகோதரிகளே, ஈஸ்டர் வாழ்த்துகள்” என்று கூறினார்.

ஆசிர்வாதம் வழங்கிய பிறகு, அவர் வாகனத்தில் ஏறி வாடிகன் சதுக்கத்தைச் சுற்றிவந்தார். அந்த நேரத்தில், பல முறை வாகனத்தை நிறுத்தி, குழந்தைகளுக்கு ஆசிர்வாதம் வழங்கினார்.

“அன்பான சகோதர சகோதரிகளே, நமது புனித தந்தை பிரான்சிஸின் மரணத்தை ஆழ்ந்த துக்கத்துடன் அறிவிக்கிறேன் என கார்டினல் ஃபாரெல் நேற்று தெரிவித்தார்.

இன்று காலை 7.35 மணிக்கு (உள்ளூர் நேரம்) ரோமின் பிஷப் பிரான்சிஸ், தந்தையிடம் திரும்பினார். அவரது முழு வாழ்க்கையும் கர்த்தருக்கும் அவருடைய திருச்சபைக்கும் சேவை செய்வதற்காக அர்ப்பணிக்கப்பட்டது .நற்செய்தியின் விழுமியங்களை விசுவாசத்துடனும் தைரியத்துடனும் உலகளாவிய அன்புடனும் நமக்குக் கற்றுக் கொடுத்தார். குறிப்பாக ஏழைகளுக்கு மிகவும் ஆதரவாக வாழ அவர் நமக்கு கற்பித்தார் எனவும் அவர் கூறியுள்ளார்.

பாப்பரசர் பிரான்சிஸ், கத்தோலிக்க திருச்சபையில் பல மாற்றங்களை முன்னெடுத்தவர். அதே நேரத்தில், பழமையான நிகழ்வுகள் தொடர வேண்டும் என்று கருதும் பழமைவாதிகளிடையேவும் இவர் பிரபலமாக இருந்தார்.இரண்டு நுரையீரல்களிலும் நிமோனியா தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த அவர், ஐந்து வார மருத்துவ சிகிச்சைக்கு பிறகு கடந்த மாதம் மருத்துவமனையில் இருந்து திரும்பினார்.

மறைந்த பாப்பரசர் பிரான்சிஸ் ஈஸ்டர் தினத்தையொட்டி வெளியிட்ட அறிக்கையே உலக மக்களுக்கான அவரது கடைசி செய்தியாக அமைந்தது. ஈஸ்டர் ஞாயிறன்று பாப்பரசரின் அறிக்கையை அவரது உதவியாளர் ஒருவர் வாசித்தார்.

அந்த செய்தியில், “மத சுதந்திரம், சிந்தனைக்கான சுதந்திரம், கருத்து தெரிவிப்பதற்கான சுதந்திரம் இன்றி அமைதி இல்லை” என பாப்பரசர் தெரிவித்திருந்தார். காஸா மக்களையும் குறிப்பாக அங்கு வாழும் கிறிஸ்தவ மக்களையும் குறிப்பிட்ட அவர், அங்கு நிகழும் மோதல்கள் மரணத்தையும் அழிவையும் ஏற்படுத்துவதாக தெரிவித்தார்.

மேலும் இந்த போர் “மோசமான மனிதாபிமான சூழ்நிலையை” உருவாக்குகிறது. உலகளாவிய யூத எதிர்ப்புவாதம் வளர்ந்து வருவது கவலைக்குரியது . “உலகின் பல்வேறு பகுதிகளில் நடக்கும் பல மோதல்களில் கொலை செய்வதற்கான தாகம் எவ்வளவு பெரியதாக உள்ளது” என்று அவர் கூறினார்.

“அனைத்து இஸ்ரேலிய மக்களும் பலஸ்தீன மக்களும் படும் துயரங்களுக்காக எனது அன்பை வெளிப்படுத்துகிறேன். போர் நிறுத்தத்துக்கு அழைப்பு விடுங்கள், பணயக்கைதிகளை விடுவியுங்கள். அமைதியான எதிர்காலத்தை விரும்பும் பட்டினியால் வாடும் மக்களுக்கு உதவுங்கள்” எனவும் பாப்பரசர் கூறியிருந்தார்.

உக்ரைன் போரில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினரும் “நீடித்த அமைதியை அடைவதை நோக்கமாகக் கொண்ட முயற்சிகளைத் தொடர” ஊக்குவிப்பதாகவும் பாப்பரசரின் இறுதி அறிக்கை தெரிவித்திருந்தது.

சர்வதேச ரீதியாக மட்டுமல்ல இலங்கையின் உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பிலும் புனித பாப்பரசர் கவனம் செலுத்தி வந்திருந்ததை நினைவு கூரவேண்டியுள்ளது .

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களுக்கும் கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் அவர்களுக்கும் இடையிலான சந்திப்பு வத்திக்கானில் உள்ள புனித பீட்டர்ஸ் பேராலயத்தில் 2022 ஆம் ஆண்டு நடைபெற்றது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடந்து அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்குமா என்ற சந்தேகம் உள்ளதால் இந்த விடயத்தில் சர்வதேச சமூகத்தின் ஆதரவின் அவசியம் குறித்து பாப்பரசரிடம் கர்தினால் தெரிவித்ததாக கொழும்பு ஆயர் அலுவலகம் அப்போது தெரிவித்திருந்தது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடந்து பல ஆண்டுகள் கடந்துவிட்டன. தாக்குதலின் உண்மையை வெளிப்படுத்தத் தவறியது, நீதிக்கான இலங்கை கத்தோலிக்கர்களின் போராட்டம், இன்றுவரை இலங்கையில் கத்தோலிக்க திருச்சபை எடுத்துள்ள நடவடிக்கைகள், அதற்குக் காரணமானவர்களை அடையாளம் காண்பதில் ஆட்சியாளர்களின் அலட்சியம் ஆகியவை குறித்து கர்தினால் புனித பாப்பரசருக்கு விளக்கியிருந்தார்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தின விசேட ஆராதனைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த போது இலங்கையில் உள்ள கத்தோலிக்க திருச்சபைகள் மீது பயங்கரவாத தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அப்போது வத்திகான் புனித பீட்டர்ஸ் சதுக்கத்தில் கூடியிருந்த மக்கள் மத்தியில் உரையாற்றிய புனித பாப்பரசர் பிரான்சிஸ், இலங்கையில் கத்தோலிக்கர்களை இலக்கு வைத்து நடத்திய தாக்குதலை வன்மையாக கண்டித்தார். இந்த சம்பவங்களுக்கு நீதியை கோரிய புனித பாப்பரசர், இதே ஏப்ரல் 21 ஆம் திகதி இறைபதம் அடைந்துள்ளதால் இந்த தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வருடாந்த நினைவுகூரலில் நிச்சயம் நினைவுகூரப்படுவார்.

கத்தோலிக்கர்களின் மட்டுமல்ல நீதியை கோரும் , உலகில் பாரபட்சங்களுக்கு உள்ளாகியவர்களுக்காக குரல் கொடுத்த பாப்பரசரின் மறைவு நிச்சயம் பேரிழப்பே. உலகின் மோதல்கள் நடக்கும் நாடுகளையெல்லாம் தனது அஹிம்சையான கோரிக்கைகள் மூலம் அமைதியை நோக்கி நகர்த்த விரும்பிய பாப்பரசரின் மறைவு நிச்சயம் ஒரு பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தப்போவது நிச்சயம். பாப்பரசரின் மறைவின் பின்னர் உலக நாடுகளின் தலைவர்கள் தெரிவிக்கும் அஞ்சலியே அதற்குச் சான்று. புனித பாப்பரசருக்கு நித்திய இளைப்பாறுதல் கிடைக்கட்டும்.

# நன்றியுணர்வு



நன்றியுணர்வோடு இருக்க வேண்டுமென்பதில் நன்முனைப்போடு திகழும் வாசகப் பெருமக்களே! வணக்கம்!

நன்றி என்கிற தமிழ்ச்சொல்லை ஒரு செயலுக்கான முற்றுப்புள்ளிச் சொல்லாகப் பலர் பயன்படுத்தி வருகிறோம். ஆனால், உண்மையில் நன்றி என்கிற சொல்லில் இருந்துதான் சமூகத்தின் அத்தனை நற்செயல்களும் புறப்பாடு காணுகின்றன. நன்றி என்கிற தமிழ்ச் சொல்லுக்கு நன்மை, உதவி, நற்பயன்பாடு எனப் பல பொருள்கள் உள்ளன. மனித உயிர்களைப் படைத்த ஆண்டவன், மனிதத்தின் மாண்பான வாழ்க்கைக்கு உதவியாக இருக்க இயற்கையைப் படைத்தார். இயற்கையிலிருந்து மனிதன் கற்றுக்கொண்டதும் பெற்றுக் கொள்வதும் ஏராளம்! ஏராளம்! மனித வாழ்க்கைக்கு உதவி, அவர்களின் நேரிய வாழ்முறைக்கு வேண்டியவற்றையெல்லாம் இயற்கை பிரதிபலன் கருதாமல் வாரி வழங்கிக் கொண்டிருக்கிறது. கைம்மாறு கருதாத நிலையில் இயற்கை நமக்குச் செய்கிற நன்மைகளுக்கெல்லாம் நன்றியுணர்வோடு நாம் திருப்பிச் செய்யவேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருக்கிறோம்.

திருப்பிச் செய்வதென்பது கல்யாணம், காதுகுத்துகளில் ஐந்நூறு ரூபா மொய்ப்பணம் பெற்று மற்றொரு வாய்ப்பில் அவருடைய வீட்டு விசேஷத்துக்கு ஐந்நூறை அறுநூறாகத் திருப்பிச் செய்வதல்ல. நன்றியறிதல், செய்நன்றியறிதல் என்பது ஒருவர் கைம்மாறு கருதாமல் நமக்குச் செய்த நன்மையை, உதவியை உரிய வாய்ப்பில் கடமையுணர்வோடு பன்மடங்காகத் திருப்பிச் செய்வதாகும். ஏனென்றால், உலகில் நிகழும் நன்மைகள் எல்லாம் செய்நன்றியறியும் நற்குணங்களாலேயே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. சக மனிதர்களோ உடன் வரும் இயற்கையோ தொடர்ந்து உதவிக்கொண்டே இருக்கவேண்டுமென்றால் நாமும் நன்றி மறவாமல் இயற்கைக்கும் சக மனிதருக்கும் உதவிக்கொண்டே இருக்க வேண்டும். ஏனென்றால், மனிதர்களோ இயற்கையோ ஒருவரையொருவர் சார்ந்து வாழும் வாழ்க்கை வாழவே படைக்கப் பட்டிருக்கின்றன.

நன்றியுணர்வு என்பது மிகச்சிறந்த மனிதகுணமாகவும் ஆகச் சிறந்த ஆன்மீகக் குணமாகவும் கருதப்படுகிறது. தான் பெறுகிற அனைத்தையும் தனக்குத் தனக்கென வைத்துக்கொள்ளாமல் பெற்றவற்றைத் தேவைப்படுவோர்க்கு வழங்கும் மனிதர்கள் ஈகைத்திறம் மிக்கவர்கள். எங்கிருந்து பெற்றோமோ அங்கேயே திரும்ப அளிப்பதென்பது நன்றியுணர்வோடு கூடிய ஈகைக் குணமாகும். சமூகத்தில், சமூகமாக வாழ விதிக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு சமூக மனிதனும் தான் வாழ்ந்ததற்கு அடையாளமாகச் சிறந்த செயல் எதையாவது இந்தச் சமூகத்துக்குத் திரும்பச் செய்துவிட்டுச் செல்லவேண்டும். இது சமூகவியல் சார்ந்த நன்றியுணர்வு. அதேவேளை, தன்னலம் கருதாமல் வாழ்தலே அன்பறம் என்பதை வலியுறுத்தும் ஆன்மீக நெறி, எலும்பையும் அடுத்தவர்க்கு அர்ப்பணிக்கக் காத்திருத்தலே சிறந்த குணம் என்கிறது.

உண்மையில் தன்னலமற்ற இறைவன் தனக்கென எதையும் வைத்துக்கொள்ளாமல் எல்லாவற்றையும் மனித ஈடேற்றத்துக்கே வாரி வழங்குகிறான் என்று எல்லாச் சமயங்களும் குறிப்பிடுகின்றன. அப்படியானால் கைம்மாறு கருதாமல் நாம் இறைவனிடமிருந்து பெறும் நன்மைகளையும் உதவிகளையும் எந்த வழியில் நன்றியுணர்வோடு திருப்பிச் செலுத்துவது? மிக எளிய வழியொன்று இருக்கிறது. “நடமாடக் கோவில் நம்பர்க்கு ஒன்று ஈயில், படமாடக் கோவில் பகவற்கு அது ஆமே!” என்கிற திருமூலர் காட்டுகிற வழிதான் அது. அதாவது, சமூகத்தில் நடமாடும் கோவில்களாக வலம் வந்துகொண்டிருக்கும் ஏழை எளியோர்க்கு நாம் எந்த உதவி செய்தாலும் அது நேரடியாகப் படமாடும் கோபுரக் கோவில்களிலே குடியிருக்கும் கடவுளர்க்குச் சென்று சேர்ந்து விடுமாம். என்னே ஆன்மீகம் உணர்த்தும் நன்றியுணர்வு!

நாம் பெறுகிற ஒவ்வொரு உதவியையும் நன்றாக நினைவில் வைத்துக்கொண்டு செய்நன்றி உணர்வோடு திரும்பச் செய்வதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். நன்றல்லதை அன்றே மறந்து விடுவது நல்லது என்று வள்ளுவர் கூறியிருப்பதால் நன்மைகளை மட்டும் மறக்கவே கூடாது. மழையும் வெயிலும் காற்றும் ஒளியும் என இயற்கையாக நாம் பெறுகிற நன்மைகள் யாவும் கைம்மாறு கருதாமல் இயற்கை நமக்கு வழங்குகிற கொடைகள் ஆகும். இப்படி உதவும் இயற்கைக்கு உதவியாக எதைத் திருப்பி நன்றியுணர்வோடு வழங்க இருக்கிறோம்.

சிறப்பாக வேறு எந்த உதவியையும் செய்து விடத் தேவையில்லை. மலை, காடு, வயல், மழை, நதி, கடல், அருவி, ஏரி, குளம், கண்மாய், மரம், செடி, கொடி எனும் இயற்கை வளங்கள் அனைத்தையும் மாசுபடாமல் காத்துநின்றால் அதுவே பேருதவியாகவும் பெருநன்மையாகவும் அமையும்.

ஒருமடங்கு விதைத்தால் பலமடங்கு விளைச்சலைத் தர நிலங்கள் தயாராக இருக்கின்றன. உரிய முறையில் உழுது, பண்படுத்தி, விதைவிதைத்து, நாற்றுநட்டு, நீர்பாய்ச்சிக், களைபறித்து விருப்பத்துடன் நிலத்திடம் நல்லுழைப்பை வழங்கினால் அந்த நிலம் மகிழ்ச்சியுடன் மகசூலைப் பெருக்கி நமக்கு நன்மை செய்யும். இயற்கையே இந்த அளவுக்கு நன்றியுணர்வோடு இருக்கும்போது ஆறறிவு படைத்த மனிதர்க்குச் சொல்லவும் வேண்டுமோ? இன்று சமூகத்தில் பெருகியுள்ள பொறாமை, அன்பின்மை, வஞ்சனை, கோபம், சகிப்புத்தன்மையின்மை, திருட்டு, கொலை, கொள்ளை போன்ற பல தீய குணங்களுக்கும் செயல்களுக்கும் நன்றியுணர்வின்மையே பெரும் காரணமாய் அமைகிறது. உலகத்தில் செய்நன்றி மறந்தவர்க்கு எப்போதும் நல்ல வாழ்க்கை அமையாது என்று சாபமும் விடுகிறார் திருவள்ளுவர். பெருந் தவிப்போடு தவித்துக்கொண்டிருந்த ஒருவருக்கு உரிய காலத்தில் ஒருவர் ஒரு சிறிய உதவியைச் செய்திருந்தால் அந்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும் அதை உலகத்தைவிடப் பெரிய உதவியாகக் கருதி மறக்கவே கூடாது. உரிய காலம் வரும்போது அவ்வுதவிக்கு பிரதியுபகாரம் செய்துவிட வேண்டும் என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

ஒரு ராஜா ஒரு நாட்டைச் சிறப்பாக நடத்தி வந்தார். அவருக்கு நாட்டு நிர்வாகத்தில் அவ்வப்போது ஆலோசனைகள் கூறப் பதினைந்து அமைச்சர்களைப் பணிக்கமர்த்தி யிருந்தார். அமைச்சர்கள் ஆலோசனை கூறும்போது மிகக் கவனமாக இருக்க வேண்டும். மீறி யாராவது தவறான ஆலோசனை வழங்கியது கண்டுபிடிக்கப்பட்டால் வித்தியாசமான முறையில் அவர்கள் கொல்லப்படுவார்கள் என்றும் எச்சரித்திருந்தார். வித்தியாசமான முறை என்றால், அரசர் கொடூரமான பத்து வேட்டை நாய்களை அரண்மனையில் வளர்த்து வந்தார். யாராவது அமைச்சர் தவறு செய்துவிட்டால் அரண்மனை விளையாட்டு மைதானத்துக்குள் அந்த அமைச்சரைத் தள்ளிவிட்டுப் பத்து வேட்டை நாய்களையும் அவிழ்த்து விட்டுவிடுவார்.

அவ்வளவுதான். நாய்க்கடி பட்டு தவறான அமைச்சர் மாண்டுபோக வேண்டியதுதான்.

தண்டனைக்குப் பயந்தே எல்லா அமைச்சர்களும் குற்றமெதுவும் இழைக்காமல் கவனமாக இருந்து வந்தனர். அப்படியிருந்தும் ஓர் அமைச்சர் திடீரென ஒரு விஷயத்தில் ஒரு சிறு தவறு செய்துவிட்டார். இது அவர் இழைக்கும் முதல் தவறுதானென்றாலும் தண்டனை வழங்குவதில் பாரபட்சம் கிடையாது என்று அரசர் முடிவெடுத்து விட்டார். அரசரைத் தேடி அமைச்சர் ஓடோடி வந்தார். “அரசே! நான் தங்களிடம் கடந்த பத்தாண்டுகள் எந்தத் தவறும் செய்யாமல், நேர்மையுடன் பணியாற்றி யிருக்கிறேன். அவற்றை மனத்தில் வைத்து, இந்த முதல்குற்றத்தை மன்னித்து என்னை விடுதலை செய்யும்படி பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்” - என்று மன்றாடினார். “முடியவே முடியாது! நாய்க்கடி தண்டனை உறுதி!” - என்று இறுதி படக் கூறினார் அரசர். “அப்படியானால் தண்டனை நிறைவேற்றத்துக்கு ஒரு பத்துநாள் அவகாசம் கொடுங்கள்” - என்று கேட்டார் அமைச்சர். “சரி வழங்கப்பட்டது. பத்துநாள் கழித்து தண்டனை நிறைவேறும்” - என்று சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டார் அரசர்.

அவகாசம் வாங்கிய கையோடு, அரண்மனையில் அந்தப் பத்து வேட்டைநாய்களும் வளர்க்கப்படும் பகுதிக்குச் சென்றார் அமைச்சர். நாய்கள் பராமரிப்பாளரிடம், நடந்ததை விவரித்துக்கூறி, “எனக்கு ஓர் உதவி செய்யுங்கள். இந்தப் பத்து நாட்கள் மட்டும் நாய்கள் பராமரிப்புப் பணிகளை நான் மேற்கொள்வதற்கு அனுமதி தந்து உதவி செய்யுங்கள்!” - என்று கேட்டார். பராமரிப்பாளரும் சரியென்று ஒத்துக்கொண்டார். அன்று முதல் அந்தப் பத்து நாய்களுக்கும் உணவு கொடுப்பது, குளிப்பாட்டி விடுவது, விளையாட்டுக் காட்டுவது, காலாற நடக்கவைத்துக் கூட்டி வருவது... என்று எல்லாப் பராமரிப்புப் பணிகளையும் சிரத்தையோடு அமைச்சர் மேற்கொண்டார்.

பத்துநாள் அவகாசம் முடிந்தது. அரண்மனை மைதானத்துக்கு அமைச்சர் கூட்டி வரப்பட்டார். அரசர், மற்ற அமைச்சர்கள், நாட்டுமக்கள் என்று அனைவரும் தண்டனை நிறைவேற்றத்தைக் காணவந்து கூடினர். மைதானத்தின் நடுவில் அமைச்சர் நிறுத்தப்பட்டார். பத்து வேட்டை நாய்களும் அவரை நோக்கி அவிழ்த்து விடப்பட்டன. அத்தனை நாய்களும் வால்களை ஆட்டிக்கொண்டு அவரிடம் நேசமாய் வந்து நின்றன. சில நாய்கள் அவரது கால்களையும் கைகளையும் நாவால் நக்கி அன்பை வெளிப்படுத்தின. பார்க்க வந்திருந்த மக்கள் கூட்டமே மருண்டு போனது. “ நாய்களுக்கு என்னவாயிற்று?” கூச்சலிட்டுக் கேட்டார் அரசர்.

“அரசே! அவற்றைக் குற்றம் கூறாதீர்கள். அவை நன்றியுணர்வோடு இருக்கின்றன!” - என்று கூறிவிட்டு மேலும் பேசினார் அமைச்சர். ‘‘நான் தங்களிடம் பத்தாண்டுகள் விசுவாசமாக உழைத்தேன். நான் இழைத்த ஒரு சிறு தவறு, அதுவும் தவறை மன்னிக்கக் கேட்டேன். நன்றியுணர்வு இருந்திருந்தால் மன்னித்திருப்பீர்கள்.

நீங்கள் மன்னிக்கவில்லை. ஆனால், வெறும் பத்தே நாட்கள்தான் அந்த நாய்களிடம் பணிபுரிந்தேன். அவற்றுக்குச் சேவை செய்தேன். அந்த நாய்கள் காட்டும் நன்றியுணர்வைத்தான் இப்போது பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்”- என்றார். இதனையடுத்து அரசர் தனது நன்றியுணர்வில்லாத் தவறுக்கு வருந்தி, தண்டனையை இரத்துபண்ணி விட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்.

ஒருவர் தற்போது கொலைபாதகச் செயலுக்கு நிகரான தீச்செயலைச் செய்திருக்கலாம். இருந்தாலும், அவருடைய வாழ்நாளில் நமக்கு ஏதாவது ஒரு நல்ல காரியத்தை, உதவியை எப்போதாவது செய்திருந்தால் போதும். அந்த நல்ல செயலுக்கு நேராக நினைவில் வைத்து இந்தக் கொலைகாரச் செயலை மன்னித்து விடுங்கள் என்று வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

“கொன்றன்ன இன்னா செயினும்
அவர்செய்த
ஒன்று நன்று உள்ளக் கெடும்”

இதுவன்றோ செய்நன்றியறிதல். நன்றியுணர்வு அன்பை வளர்க்கிறது. ஒருவருக்கொருவர் உதவிக்கொள்கிற மனித நேயத்தை மலரச் செய்கிறது. எல்லோரும் எல்லாமும் பெறக்கூடிய சமத்துவத்தைச் செழிக்கச் செய்கிறது.

நன்றி - மாலை மலர்

## இன்றைய நாளில்...

- 1946 – மலாயாவில் ஜப்பானின் ஆக்கிரமிப்பில் 5 ஆண்டுகளாக இருந்த இலங்கையரின் முதலாவது தொகுதியினர் கொழும்பு வந்து சேர்ந்தனர்.
- 1970 – முதலாவது புவி நாள் கொண்டாடப்பட்டது.
- 1977 – ஒளியிழை முதற்றடவையாக நேரடித் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது.
- 2000 – ஆனையிறவு படைத்தளம் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது.
- 2005 – ஜப்பானியப் பிரதமர் ஜூனிசிரோ கொய்சுமி ஜப்பானின் போர்க்கால நடவடிக்கைகளுக்காக மன்னிப்புக் கேட்டார்.
- 2006 – இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில் உள்ள ஆய்வு மையத்தில் பிரமோஸ் ஏவுகணை வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது.
- 2016 – புவி சூடாதலைத் தவிர்ப்பதற்கான உதவிகள் குறித்த உடன்பாடு பாரிஸ் நகரில் எட்டப்பட்டது.

## நக்கல் நமசிவாயம்

*தமிழருக்கு அரசியல் தீர்வு வழங்கும் அறிவிப்பை போலத்தான் ஈஸ்டர் தின தாக்குதல் விசாரணை அறிவிப்பும். ஈஸ்டர் தினமும் முடிஞ்சுபோச்சு .ஜனாதிபதி சொன்ன சூத்திரதாரிதான் யார் என்று தெரியேல்ல..*



## தினசரி பலாபலன்கள்

**விசுவாவசு சித்திரை மாதம் 09ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**மேஷம்** பொருள் வரவும் அதனால் மன மகிழ்ச்சியும் உண்டு. வெளிநாட்டு நண்பர்களால் உதவிகள் உண்டு.

**ரிஷபம்** எதிர்பார்த்துக் காத்திருந்த உதவி எதிர்பாராத வகையில் கிடைக்கும். தொழில் வியாபார இலாபங்கள் உண்டு.

**மிதுனம்** உங்கள் நிலையைத் தக்கவைத்துக் கொள்ள முழுமையான உழைப்பு அவசியம். எதிரிகளின் கை ஓங்கும்.

**கடகம்** உடல்,மன நோய்களால் அவதிப் படுவீர்கள். புதிய முயற்சிகள் எதுவும் இன்று எடுக்கவேண்டாம். நிதானம் வேண்டும்.

**சிம்மம்** காதல் அல்லது திருமணம் நிச்சயிக்கப்படும். கூட்டு வியாபார நன்மைகள், இலாபங்கள் உண்டு. மனமகிழ்ச்சி உண்டு.

**கன்னி** தேவைக்கேற்ப பண வருவாய் அமையும். கேட்ட கடன் இன்று கிடைக்கப்பெறுவீர்கள். நண்பர் உதவி உண்டு.

**துலாம்** உடல் அசதியால் சிரமம். நோயால் சற்று மந்த நிலையை அனுபவிப்பீர்கள். குடும்ப சுகம் உண்டு.

**விருச்சிகம்** தாயாரின் உடல் நிலை தொடர்பாக கவனஞ்செலுத்துங்கள். வாழ்க்கை முன்னேற்ற ஏற்பாடுகளைச் செய்வீர்கள்.

**தனுசு** எதையும் தைரியமாகத் துணிந்து செய்வீர்கள். திடீர் அதிர்ஷ்டம் அல்லது கேட்ட கடன் தொகை உங்கள் கரங்கிட்டும்.

**மகரம்** முக்கியமானவர்களுடன் உரை யாடும்போது வார்த்தைகளைக் கவனமாகப் பிரயோகியுங்கள். தனச் சேதம் உண்டு.

**கும்பம்** எதிர்பாராத வகையில் பரிசுப் பொருட்கள் கிடைக்கப்பெறுவீர்கள். வீண் மனக் குழப்பம் வேண்டாம்.

**மீனம்** தேவையற்ற செலவுகளைக் குறைத்துக்கொள்வது நல்லது. வாகனங்களில் பயணிக்கும்போது எச்சரிக்கை வேண்டும்.

| | |
|---|---|
| திதி | : நவமி மு.இ.6.13 வரை பின் தசமி |
| நட்சத்திரம் | : திருவோணம் பி.ப.12.44 வரை பின் அவிட்டம் |
| பிறை | : தேய்பிறை |
| யோகம் | : மரண யோகம் முழுவதும் |
| வார சூலை | : வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது. |
| நல்ல நேரம் | : காலை- 7.59 – 8.59 மணி வரை. பகல்- 11.59 – 12.59 மணி வரை. மாலை- 3.59 – 5.59 மணி வரை |
| ராகு காலம் | : 2.59 – 4.29 மணி வரை |
| எமகண்டம் | : 8.59 – 10.29 மணி வரை |
| குளிகை | : 11.59 – 1.29 மணி வரை |
| சந்திராஷ்டமம் | : மிதுன-கடக ராசியினர் எச்சரிக்கையாக செயற் படவும். (பின்னிரவு 12.31 மணி வரை மிதுன ராசியினருக்கு) |

### அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்

**இன்று பிற்பகல் 12.44 மணி வரை**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், சித்திரை, சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி

இன்று பிற்பகல் 12.44 மணிக்கு மேல்
பரணி, ரோஹிணி, திருவாதிரை, புனர்பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம். பூரட்டாதி, ரேவதி

போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், போட்டி, தேர்வுகளில் வெற்றி, தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# வர்த்தகத் திட்டங்களுக்கேற்ப இ.போ.ச. டிப்போக்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க



இலங்கை போக்குவரத்துச் சபையைக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் போக்குவரத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட வணிகத் திட்டத்துக்கேற்ப (Business Plan) தெரிவுசெய்யப்பட்ட 25 டிப்போக்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இரத்தினபுரியில் அமைந்துள்ள டிப்போ மறுசீரமைப்புத் திட்டத்துடன் தொடர்புடைய இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சப்ரகமுவ பிராந்திய அலுவலகத்துக்கு நேற்று முன்தினம் (20) விஜயம் மேற்கொண்டு மேற்பார்வையிட்ட போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அமைச்சர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் ,

''அன்று சில நபர்கள் திருட்டுக்கு பங்களிப்புச் செய்தார்கள். ஏனையவர்கள் அமைதியாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பெரிய பெரிய ஆட்கள் பெரிய பெரிய அளவில் திருட்டை மேற்கொள்ளும்போது சிறிய சிறிய நபர்கள் சிறிய சிறிய திருட்டைச் செய்வதற்கு பழக்கப்பட்டார்கள். அமைச்சர் திருட்டை மேற்கொண்டு நிறுவனத்தை அழிப்பதைக் கண்ட சிறு ஊழியருக்கு சுற்றும் மின் விசிறியைக்கூட அணைப்பதற்குத் தோன்றுவதில்லை.

இலங்கை போக்குவரத்துச் சபையை கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் என்ற வகையில் நாம் தயார். அதற்காக சகல தரத்திலான சகல ஊழியர் குழுவினதும் ஒத்துழைப்பு அவசியம்.

தற்போது காணப்படும் நிலைமையில் இலங்கைப் போக்குவரத்துச் சபை இலாபம் ஈட்டுவதற்கு முன்னர் இடம்பெறும் நட்டத்தை நிறுத்துவது அவசியமில்லை. டிக்கெட் வழங்குதல் மற்றும் டிக்கெட் பணத்தைச் சேகரிப்பதை சரியாக மேற்கொள்ள வேண்டும். இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு தமது தொழில் தொடர்பாக மதிப்பொன்றை ஏற்படுத்த வேண்டும் .

அரசாங்கத்துடன் காணப்படும் நிறுவனங்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை . நெருக்கடியான நிலைமையில் உள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் இலஞ்சம், ஊழல் என்ற இரண்டு பக்கங்களையும் ஒழித்து, இலங்கைப் போக்குவரத்துச் சபையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என்றார்.

சப்ரகமுவ பிராந்திய அலுவலகத்தில் தொழில்நுட்பப் பிரிவால் திருத்தப்பட்ட பஸ் ஒன்றை தெனியாய - இரத்தினபுரி (வீதி இல. 62) வீதியில் செலுத்துவதற்காக இணைத்துக்கொண்ட நிகழ்வு அமைச்சர் தலைமையில் இடம்பெற்றது.

# சாமர சம்பத்துக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

பதுளை மாவட்ட புதிய ஜனநாயக முன்னணி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான சாமர சம்பத் தசநாயக்கவை எதிர்வரும் மே 05ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு பதுளை நீதவான் நுஜித் டி சில்வா நேற்று (21) உத்தரவிட்டுள்ளார்.

இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட மனுத் தாக்கலுக்கு அமைவாகவே அவரது விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பை வழங்குவதற்காக மாகாண சபை ஊடாக வங்கியிலிருந்து ரூ. 10 இலட்சம் காசோலையை பெற்று, அதனை தனது தனிப்பட்ட தேவைக்காகப் பயன்படுத்திய ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ஊழல் தொடர்பான மூன்று தனித்தனி வழக்குகள் தொடர்பாக, பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க கடந்த மார்ச் 27ஆம் திகதி கைதுசெய்யப்பட்டார்.

அவர் 2016 ஆம் ஆண்டு ஊவா மாகாண முதலமைச்சராக இருந்த காலத்தில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் ஊழல் குற்றச்சாட்டுகளாகும்.

மாகாணத்தில் உள்ள முன்பள்ளி மாணவர்களுக்கு பாடசாலைப் பைகள் வழங்குவதற்காக மூன்று அரச வங்கிகளிடமிருந்து நிதி கோரியிருந்தார்.

இரண்டு வங்கிகள் அவருக்கு ஒரு மில்லியன் ரூபா மற்றும் ரூ. 2.5 மில்லியன் வழங்கியிருந்தன. பின்னர் அவை அவரது தனிப்பட்ட அறக்கட்டளை கணக்குக்கு மாற்றப்பட்டுள்ளன.

மற்றைய அரச வங்கி அவரது கோரிக்கையை நிராகரித்ததையடுத்து குறித்த வங்கியிலிருந்த ஊவா மாகாண சபையின் நிலையான வைப்புக்கணக்குப் பணத்தை அதன் முதிர்வுக்கு முன்னர் பெற்று பழிவாங்கும் வகையில் செயற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதன் மூலம் ரூ. 17.3 மில்லியனுக்கும் அதிக நஷ்டத்தை/ வருமானத்தை ஊவா மாகாண சபை இழந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பான இரு வழக்குகளில் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் அவருக்கு பிணை வழங்கப்பட்டது. அதேநேரத்தில் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக மூன்றாவது வழக்கில பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

# இராணுவ சிப்பாய்கள் சென்ற பஸ் விபத்து
## 22 பேர் காயம்

நிட்டம்புவ - கிரிந்திவெல வீதியில் நேற்று (21) இடம்பெற்ற பஸ் விபத்தில் 22 இராணுவ சிப்பாய்கள் காயமடைந்துள்ளனர்.

விபத்துக் குறித்து பொலிஸார் தெரிவிக்கையில், நிட்டம்புவவிலிருந்து கிரிந்திவெலவுக்கு சிப்பாய்களை ஏற்றிச்சென்ற பஸ் எதிர்த் திசையில் பயணித்த லொறியுடன் மோதியது.

இச்சம்பவத்தில் பஸ் சாரதி உட்பட 22 இராணுவ சிப்பாய்கள் காயமடைந்து வத்துபிட்டிவெல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ சிப்பாய்களில் 20 பேர் வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பியுள்ளனர். அதேநேரத்தில் ஒரு இராணுவ சிப்பாயும் பஸ் சாரதியும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# தலதா கண்காட்சியை முன்னிட்டு கண்டியில் முறையாக இடம்பெறும் கழிவு முகாமைத்துவம்
## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவிப்பு



கண்டி நகரம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் கழிவு முகாமைத்துவ செயற்பாடுகள் மிகவும் சரியான முறையில் இடம்பெறுவதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

கொட்டும் மழையிலும் குப்பைகளைச் சேகரிக்கும் வாகனம் 45 நிமிடங்களுக்கு ஒரு தடவை பிரதேசம் முழுவதுமுள்ள குப்பைகளை சேகரித்தவாறு செல்வதாகவும் அதற்கு மேலதிகமாக தள்ளுவண்டி மூலமும் பிரதான மத்திய நிலையங்களில் குப்பை சேகரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகரம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களுக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் அப்பிரதேசத்துக்கு பொறுப்புக் கூறுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்தப் பொறுப்பு வாய்ந்த அதிகாரி கழிவு முகாமைத்துவத்தின் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு உடனடியாக அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதுடன் அதனைத் தெரிந்துகொண்ட ஐந்து அல்லது 10 நிமிடங்களுக்குள் அப்பிரதேசத்தை சுத்தம் செய்வார்.

அது தவிர வீதியோர வியாபாரிகள் அனைவரும் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு க்யூ ஆர் குறியீட்டுடன் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

கழிவு அல்லது உணவு, குடிபானம் தொடர்பாக பொது மக்களின் பிரச்சினைகளை அனுப்புவதற்கு கியூ ஆர் குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அது அப்பிரதேசம் முழுவதும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேவையானவர்களுக்கு அந்தக் க்யூ ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்து அதன் புகைப்படத்துடன் அல்லது முறைப்பாடு மற்றும் யோசனைகளை முன்வைக்க முடிவதுடன் அந்தப் பொதுமக்களின்முறைப்பாடுகள் தொடர்பாக 10 நிமிடங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் கண்டி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

# மேர்வின் சில்வாவுக்கு மே 5 வரை விளக்கமறியல்

*(ஹனபி எம் .தாஸீம்)*

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவை மே 05 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கிரிபத்கொட நகரில் கட்டுமானத்துக்காக அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்ட காணிக்கு போலி ஆவணங்களைத் தயாரித்தமை தொடர்பாக குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட நான்கு சந்தேக நபர்களையும் மே 05 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க மஹர எண் 01 நீதிமன்றத்தின் நீதவான் காஞ்சனா டி சில்வா நேற்று (21) பிற்பகல் உத்தரவிட்டார்.

மேலும், குற்றப்புலனாய்வுத் துறையின் கோரிக்கையைத் தொடர்ந்து தற்போது தலைமறைவாகவுள்ள இரண்டு சந்தேக நபர்களான முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர மற்றும் முன்னாள் களனி பிரதேச சபை உறுப்பினர் மில்ரோய் பெரேரா ஆகியோரைக் கைதுசெய்வதற்கான புதிய பிடியாணையையும் நீதவான் பிறப்பித்தார்.

தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு சந்தேக நபர்களும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படாததால், சிறைச்சாலை மூலம் அவர்களுக்கு உத்தரவு தெரிவிக்கப்படுமென்றும் நீதவான் குறிப்பிட்டார். நேற்று (21) பிற்பகல் வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு சந்தேக நபர்களான நவீன் வீரக்கோன், முன்னாள் இராஜாங்க அமைச்சர் டாக்டர் மேர்வின் சில்வா, களனி பிரதேச சபையின் முன்னாள் துணைத் தலைவர் டாக்டர் ஜெயந்த சின்ஹாபாகு கப்ரால் மற்றும் மேர்வின் சில்வாவின் அப்போதைய முன்னாள் பாராளுமன்றச் செயலாளர் டான் சரத் குமார எதிரிசிங்க, (சிங்கப்பூர் சரத்) ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை.

அத்துடன், முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர மற்றும் முன்னாள் களனி பிரதேச சபை உறுப்பினர் மில்ரோய் பெரேரா ஆகியோர் இன்னும் கைதுசெய்யப்படவில்லை.

# முன்னாள் ஜனாதிபதியான ரணிலின் வருகையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தியோருக்கெதிராக வழக்கு
## நீதிமன்றத்தின் நேரத்தை வீணாக்க வேண்டாம் என்கிறார் சுமந்திரன்



*(வீரமுனை செய்தியாளர்)*

வீதிகளை மறித்துப் போராட்டம் நடத்தியதன் மூலம் ஜனாதிபதியாக வந்தவரே ரணில் விக்கிரமசிங்க. அவரின் வருகைக்காக வீதியில் போராட்டம் நடத்தியதற்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணியும் இலங்கை தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்களின் பிரச்சினை தொடர்பான நீதி கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சந்தேக நபர்களுக்கு எதிரான வழக்கு நேற்று (21) தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2023 ஒக்டோபர் 08ஆம் திகதி மட்டக்களப்பு - செங்கலடி பகுதிக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகையின் போது கொம்மாதுறை பகுதியில் - மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல்தரை பிரச்சினைக்குத் தீர்வு கோரி வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள்,பண்ணையாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட 30 பேருக்கெதிரான வழக்கு விசாரணை நேற்று (21) ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி மதுஜலா கேதீஸ்வரன் முன்னிலையில் இடம்பெற்ற வழக்கு விசாரணையானது இறுதித் தீப்புக்காக 30ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் ஆஜராகியிருந்தார்.

இதன்போது ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனால் சமர்ப்பணம் முன்வைக்கப்பட்டது. அவரது சமர்ப்பணத்தின்போது,

"குறித்த வழக்கானது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வருகைதந்தபோது அதற்கு எதிராகப் போராட்டம் நடத்தியதாக 36பேருக்கு எதிராக பொலிஸாரினால் ஏறாவூர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டது. இதன்போது முறையான ஆதாரங்கள் முன்வைக்கப்படாமையால் நீதிவான் நீதிமன்ற நீதிபதியால் வழக்கு தள்ளுபடிசெய்யப்பட்டது. இந்நிலையில் மீண்டும் அதே தகவலுடன் 30பேருக்கு எதிராக பொலிஸாரால் மீண்டும் வழக்கு தாக்கல்செய்யப்பட்டது. இந்த வழக்கில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள்,போராட்டத்தில் கலந்துகொள்ளாதவர்களும் இணைக்கப்பட்டு தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கின் நீதிபதி இடமாற்றலாகிச் சென்றுள்ள நிலையில் அவரின் கட்டளையொன்று நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அதன் பிரகாரம் குற்றப்பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு வழக்கு நடத்தப்படுகின்றது.தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தின் கீழ் மக்கள் போக்குவரத்தை தடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டே முன்வைக்கப்பட்டுள்ளது.


வீதியை போராட்டக்காரர்கள் மறித்தார்கள் என்பது ஒரு சிறு விடயம். இந்த நாட்டில் நடக்கின்ற விடயம். சட்டம் சிறுசிறு விடயங்களை கவனத்தில்கொள்ளாது. சிறிய விடயத்துக்கு வழக்கைத் தாக்கல்செய்து அனைவரது நேரத்தையும் வீணடித்து எல்லாவற்றுக்கும் மேலாக நீதிமன்றத்தின் நேரத்தையும் வீணடித்து இந்த வழக்கு தாக்கல்செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கைத் தள்ளுபடி செய்யவேண்டும்.

வீதியை மறித்துப் போராட்டம் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டு ஒரு விநோதமான குற்றச்சாட்டு. ஏனென்றால், ரணில் விக்கிரமசிங்க இங்கு வரும்போதுதான் அப்படிச் செய்தார்கள் என்று சொல்லப்படுகின்றது. ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதியாக வந்தது தலைநகரில் பல இடங்களில் வீதியை மறித்து போராட்டம் நடத்தியதனால்தான்.

எனவே, புதிய புதிய சிந்தனையில் விநோதமான வழக்குகளை தாக்கல்செய்து நீதிமன்ற நேரத்தை வீணாக்கக்கூடாது" என்ற சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

சமர்ப்பணங்களை செவிமடுத்த நீதிவான் எதிர்வரும் ஏப்ரல் 30ஆம் திகதி வரை வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

# இரண்டாயிரத்தை தாண்டிய தேர்தல் விதிமீறல்கள்
## இதுவரை 2011 முறைப்பாடுகள் பதிவு



உள்ளூராட்சித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கையை தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

அதனடிப்படையில் இதுவரை 2011 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், 9 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 137 முறைப்பாடுகள் பதிவாகியுள்ள நிலையில், தேர்தல் குறித்த வன்முறைச் சம்பவம் எதுவும் பதிவாகவில்லையெனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பான முறைப்பாடுகளே இதுவரை அதிகமாகக் கிடைக்கப்பெற்றுள்ளன. அது 1,850ஆகப் பதிவாகியுள்ளது.

அதனடிப்படையில் இதுவரையான முறைப்பாடுகளில் 1,642 முறைப்பாடு களுக்கான தீர்வுகள் கண்டறியப்பட்ட நிலையில், 369 முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

# ஈஸ்டர் தினத் தாக்குதலில் உயிரிழந்தோருக்கு கொச்சிக்கடையில் 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி




உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்கு நீதிகோரி முன்னெடுக்கப்பட்ட நடைபவனி நேற்று (21) கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.

(படப்பிடிப்பு – லலித் பெரேரா)

# வவுனியா பூவரசங்குளம் பகுதியில் மக்களை துப்பாக்கியைக் காட்டி மிரட்டிய வனவள அதிகாரி

## சத்தியலிங்கம் எம்.பி. குற்றச்சாட்டு

(சி.திவியா)

வவுனியா, பூவரசங்குளம் பகுதியில் மக்களின் சொந்தக் காணிகளை எல்லையிட வந்த வனவள அதிகாரியொருவர் துப்பாக்கியைக் காட்டி மிரட்டியதாக பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் பிரதேச தேர்தல் காரியாலயம் நேற்று (21) வவுனியா மாகறம்பைக்குளம் பிரதான வீதியில் திறந்துவைக்கப்பட்டது.

அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

வவுனியாவிலுள்ள நான்கு உள்ளூராட்சி மன்றங்களிலும் இலங்கை தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்கும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. இது ஓர் எல்லைப்புற மாவட்டம். இதன் இனப்பரம்பல் கணிசமானளவு மாற்றப்பட்டிருக்கிறது. எந்த அரசாங்கம் வந்தாலும் இந்தச் செயற்றிட்டம் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது.

தற்போது இந்த ஆட்சிமாற்றம் ஏற்பட்டமைக்கு முக்கிய காரணம், நாட்டின் பொருளாதார பிரச்சினையே. கடந்தகால ஆட்சியாளர்கள் விட்ட தவறே ஜே.வி.பி. என்ற என்.பி.பி.ஆட்சியமைப்பதற்கு காரணமாக இருந்தது.

இலங்கை மக்கள் என்ற வகையில் பார்த்தால் ஊழலில்லாத ஓர் ஆட்சி, மக்களுடைய சொத்தை கொள்ளையடிக்காத அரசாங்கம், ஆட்சியாளர்கள் இருக்கவேண்டியது அனைவருக்கும் பொதுவானதொரு பிரச்சினை.

ஆனால், தமிழ்மக்களைப் பொறுத்தவரை இதைவிட மேலதிகமாக இனப்பிரச்சினை என்ற ஒன்று இருக்கிறது. இந்த அரசாங்கம் பொருளாதார முன்னேற்றத்தைக் காண்பதற்குரிய முதற்படிகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதற்கு நாங்கள் நாட்டு மக்கள் என்ற அடிப்படையில் ஆதரவளிக்கலாம்.

எமது அரசியல் போராட்டத்துக்கான தீர்வு கிடைக்கும் வரையில் தமிழ் மக்களாகிய நாங்கள் விடிவுநோக்கிய பயணத்தில் மாற்றமில்லாமல் தொடர்ந்து பயணிக்கவேண்டிய கடமையிருக்கிறது.

தற்போதைய அரசுக்கு பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கான சந்தர்ப்பங்கள் இருந்தும் அதனை நீக்காமல் இப்போதும் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றது. அதேபோல அண்மையில் வவுனியாவில் மக்களின் சொந்தக் காணிகளுக்குள் வனவளத் திணைக்களம் எல்லை போடுகின்றமை தொடர்பாக பொதுமக்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. நான் அங்கு சென்றமையால் அதனைத் தடுக்க முடிந்தது. ஏன் அரசாங்கத்தால் இதனைச் செய்யமுடியாது. இடம்பெயர்ந்த மக்கள் தற்போது தமது சொந்தக் காணிகளுக்குள் செல்வதை இந்தத் திணைக்களம்



எதற்காக தடுக்கிறது. வவுனியா பூவரசங்குளம் பகுதியிலுள்ள மக்கள் இது தங்களுக்குரிய காணி என்று தெரிவித்தபோது அங்கு நின்ற வனவளத் திணைக்கள அதிகாரி தனது துப்பாக்கியை எடுத்துக் காட்டியுள்ளார். நான் அவர்களை எச்சரித்திருந்தேன்.

இதன்மூலம் அடக்குமுறை அரசியலை செய்வதற்கு அரசாங்கம் மாறினாலும் அரச நிர்வாகம் மாறவில்லை என்பது புலப்படுகிறது. அதனை மாற்றவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கிறது. நாட்டின் பொருளாதாரத்தை ஆறு மாதங்களுக்குள் மாற்றுங்கள் என்று கூறுவது இயலாத விடயம். அதற்கு நீண்டகாலம் எடுக்கும். அதற்கு நாங்களும் இணைந்து வேலை செய்ய தயாராக இருக்கிறோம். அது பொதுவான பிரச்சினை. ஆனால், இந்த மக்களின் காணி விடயங்களில் நிதி செலவழிக்காமல் உடனடியாக தீர்வை வழங்கமுடியும். அதனைச் செய்ய ஏன் தயங்குகின்றனர். இந்த நிர்வாகங்களை கையாளமுடியாத - கையாலாகாத அரசாங்கமாகவே இது இருக்கிறது - என்றார்.

# பளையில் நீர் விநியோகத் திட்டங்களைப் பார்வையிட்ட ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள்



(மு.தமிழ்ச்செல்வன்)

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் பளையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற நீர் விநியோகத் திட்டங்களை ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

கிளிநொச்சிக்கு விஜயம் செய்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் குழுவினர் பளையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற குடிநீர் விநியோக நடவடிக்கைகளைப் பார்வையிட்டதோடு, பொதுமக்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகளுடன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரிகளும் விஜயம் மேற்கொண்டனர்.

பளை பிரதேசத்தில் பெரும்பாலான பகுதிகளின் நீர் குடிப்பதற்கு பொருத்தமற்ற நீராகக் காணப்படுவதோடு. வறட்சிக் காலத்தில் குடிநீர் உட்பட நீர்த் தேவைகளுக்கு நெருக்கடியும் ஏற்பட்டு வருகின்றது. இந்நிலையில், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்படுகின்ற குடிநீர் விநியோக நடவடிக்கைகள் பொதுமக்களின் நெருக்கடியை தீர்ப்பதாக அமைந்துள்ளதாக தெரிவித்த மக்கள், பல பிரதேசங்களுக்கு தற்போது வரை நீர் விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்கள்.

எனவே, இது விடயம் தொடர்பில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடன் தொடர்புகொண்டு வினவியபோது பளை பிரதேசத்துக்கான நீர் விநியோக நடவடிக்கைகள் படிப்படியாக ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் குழாய் வழி குடிநீரை பெற்றுக் கொள்வதற்கு அலுவலகத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்பப்படிவங்களைப்பெற்று அதனைப் பூர்த்திசெய்து வழங்கி உரிய கட்டணத்தை செலுத்துவதன் மூலம் நீர் இணைப்பை பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவித்தனர்.

# மட்டு. சீயோன் தேவாலய குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களின் 6ஆவது ஆண்டு நினைவேந்தல்





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 6ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை (21) இடம்பெற்றது. இதன்போது பலத்த பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் தேவாலயத்தின் முன்னால் உயிரிழந்தவர்களின் உறவுகள் மத்தியில் மெழுகுவர்த்தி ஏற்றி மலர் வைத்து மௌன அஞ்சலி செலுத்தினர்.

அகில இலங்கை கிறிஸ்தவ காங்கிரஸ் கட்சியின் தலைவர் சிவதர்சன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் குண்டுவெடிப்பில் உயிரிழந்து மற்றும் படுகாயமடைந்து பாதிக்கப்பட்டவர்களின் உறவுகள், கட்சியின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.காலை 9.05 தேவாலயத்தின் முன்பகுதியில் உயிரிழந்தவர்களின் உருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து மெழுகுவர்த்தி ஏற்றி மௌன அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது பொலிஸார், விமானப்படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டனர். இங்கு இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 14 சிறுவர்கள் உட்பட 31 பேர் உயிரிழந்ததுடன், 80 பேர் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஈஸ்டர் தாக்குதலில் உயிர்நீத்த உறவுகளை நினைவுகூரல்





(கல்லடி செய்தியாளர்)

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த உறவுகளின் நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பு, கருவேப்பங்கேணி புனித சூசையப்பர் தேவாலயத்துக்கு அருகாமையில் நேற்று திங்கட்கிழமை (21) காலை 6.00 மணியளவில் இடம்பெற்றது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட 31 ஆத்மாக்களுக்கும் விளக்குகள் ஏற்றப்பட்டு, மலர் அஞ்சலியும் ஒரு நிமிட அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

தேவாலயத்தின் பங்குத்தந்தை ஜோர்ஜ் ஜீவராஜினால் கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் கிராமத்தின் பொதுமக்கள், இளைஞர் யுவதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# கிழக்கு சிறுபான்மைச் சமூகத்தைப் பற்றிச் சிந்திக்கின்ற ஒரேயொரு கட்சியாக தேசிய காங்கிரஸ் விளங்குகிறது

## கிண்ணியா தேர்தல் பிரசாரத்தின்போது முன்னாள் அமைச்சர் அதாவுல்லா தெரிவிப்பு




(சீனக்குடா செய்தியாளர்)

''அமைச்சர் அஷ்ரப்பின் மறைவுக்குப் பின்னர் கிழக்கு மாகாண சிறுபான்மைச் சமூகத்தைப் பற்றி சிந்திக்கின்ற ஒரே கட்சி தேசிய காங்கிரஸ் மட்டும்தான்'' - என முன்னாள் அமைச்சரும் தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்தார்.

கிண்ணியா நகர சபை மற்றும் பிரதேச சபைகளுக்கு தேசிய காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, கிண்ணியா விஷன் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (20) மாலை இடம்பெற்ற கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''வாக்கு போடுவதென்பது வெறுமனே வேட்பாளருக்கு அல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அந்த வேட்பாளர் சார்ந்த கட்சி எது, அதன் கொள்கைகள் இலக்குகள் என்ன என்பது தொடர்பாக சிந்தித்து வாக்களிக்க வேண்டும். இந்தச் சிந்தனையிலே இந்தப் பிராந்திய மக்கள் இருப்பார்கள் என்பதையும் நம்புகிறேன்.

கடந்த காலங்களில் திருகோணமலை மாவட்ட மக்கள் பல தேர்தல்களில் வெவ்வேறு கட்சிகளுக்கு வாக்களித்ததன் மூலம் இந்த மாவட்டத்தின் உட்சுவரோ வெளிச்சுவரோ மேம்படுத்தப்படவில்லை. முறையான எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளும் இங்கு மேற்கொள்ளப்படவுமில்லை. மக்களின் சமூக பொருளாதார தேவைகளை நிறைவேற்றக்கூடிய திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

ஆனால், இந்த நாட்டிலே அதியுச்ச வளங்களைக் கொண்ட ஒரு பிரதேசம் திருகோணமலை மாவட்டமாகும். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்து கிட்டத்தட்ட ஒரு மாத காலத்துக்குப் பிறகுதான், நிராகரிக்கப்பட்ட கட்சிகளுக்கு நீதிமன்றத்தின் நீதி கிடைத்தது. அதுவரைக்கும் தேர்தல் நடக்குமா, நடக்காதா என்ற சந்தேகமே மக்கள் மத்தியில் நிலவி வந்தது. இதன்மூலம் நிராகரிக்கப்பட்ட சபைகளுக்குத் தேர்தல் நடக்கும் என்ற உறுதியான நிலைப்பாடு சில தினங்களுக்கு முன்னர்தான் உறுதியானது.

இதனையடுத்து, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் எங்களது தேர்தல் பிரசாரங்களை முடக்கிவிட்டிருக்கின்றோம். அந்த வகையில் இன்று கிண்ணியா நகர சபை மற்றும் பிரதேச சபை ஆகிய பிரதேசங்களுக்கான பிரசாரங்களை மேற்கொண்டிருக்கின்றோம். நான் நெடுஞ்சாலைகள் அமைச்சராக இருந்தபோதே, இலங்கையில் மிக நீளமான கிண்ணியா பாலம் நிர்மாணிக்கப்பட்டு மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

எனவே, என்ன செய்தோம் என்பதை விடவும் எதிர்காலத்தில் இந்த மக்களுக்கு அபிவிருத்தித் திட்டங்களை செய்யக்கூடிய ஒரே கட்சி தேசிய காங்கிரஸ்தான் என்று இந்த நாட்டிலுள்ள அனைத்து சிறுபான்மைச் சமூகங்களும் நன்குகறிவார்கள். இந்த நாட்டில் சிறுபான்மைச் சமூகங்கள் முறையாக வாழ்வதற்கு காணிப் பிரச்சினைகள் தொடர்பாக தீர்வுகள் காணப்பட வேண்டும். இதற்காக நாங்கள் நீர் பூங்கா என்ற ஒரு பிரகடனத்தை அறிமுகப்படுத்தி, சமூகங்கள் ஒன்றுபட்டு வாழ்வதற்கு அதுதான் இயற்கையான தீர்வு என்ற அடிப்படையில் தேசிய காங்கிரஸ் செயற்பட்டு வருகின்றது.

ஆகவே, திருகோணமலை மாவட்டத்தில் எந்தவொரு அரசியல் கட்சியாக இருந்தாலும் எந்த வாக்காளர்களாக இருந்தாலும், அவர்களுக்கு இங்கிருக்கின்ற ஒரேயொரு தெரிவு, தேசிய காங்கிரஸ் மட்டும்தான்'' என்றும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் , கிண்ணியா நகர மற்றும் பிரதேச சபைகளில் தேசிய காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## கிழக்கில் அதிக வெப்பம்

# பனை நுங்கு அருந்தி உஷ்ணம் தீர்க்கும் சுற்றுலாப் பயணிகளும் பொதுமக்களும்



(காத்தான்குடி மேலதிக செய்தியாளர்)

கிழக்கு மாகாணத்தில் தற்போது அதிக வெப்பமான காலநிலை நிலவி வருகிறது. உஷ்ணம் காரணமாக பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அதிக உஷ்ணம் காரணமாக குளிரான பானங்களையும் நீரையும் அருந்துவதில் பொதுமக்கள் ஆர்வங்காட்டி வருகின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் பனை நுங்கு அருந்துவதில் பொதுமக்கள் அதிக ஆர்வம் காட்டுவதை அவதானிக்க முடிகின்றது.

மட்டக்களப்பு - கல்முனை, மட்டக்களப்பு -கொழும்பு நெடுஞ்சாலைகளில் பாதை ஓரத்தில் அதிகளவிலான இடங்களில் நுங்கு விற்பனை செய்யப்படுகிறது. அப்பாதையினால் பயணிக்கும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகளவிலானோர் நுங்கு அருந்தி உஷ்ணத்தை தணிப்பதை காண முடிகின்றது.

குறித்த நெடுஞ்சாலையில் வாகனங்களில் பயணிக்கும் சுற்றுலாப் பயணிகள் வாகனங்களை நிறுத்தி தமது உஷ்ணத்தை தணிப்பதற்காக நுங்கு அருந்துவதை காணமுடிகிறது. இதனால் அப்பிரதேசத்திலுள்ள சாதாரண வியாபாரிகள் நன்மையடைந்து வருவதுடன் வருமானத்தையும் பெற்று வருகின்றனர்.

# அம்பாறையில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடிப்பு



(அக்கரைப்பற்று செய்தியாளர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் பிரசாரங்கள் சூடு பிடித்துள்ளன. அக்கரைப்பற்று மாநகர சபைக்கான தேர்தலில் தேசிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

எதிர்வரும் 06ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் அக்கரைப்பற்று மாநகர சபையின் 12 வட்டாரங்களில் 12 வேட்பாளர்களும் 08 பட்டியல் உறுப்பினர்களுமாக 20 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளார்கள்.

அக்கரைப்பற்று மாநகரத்தில் பொதுமக்களின் வீடுகளுக்கும் வர்த்தக நிலையங்களுக்கும் கட்சிகளின் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் சென்று துண்டுப்பிரசுரங்களை வழங்குவதுடன், பிரசாரப் பணிகளிலும் ஈடுபட்டுவருகின்றனர்.

போட்டியிடும் கட்சிகளால் வட்டாரங்களில் தினந்தோறும் இரவுநேரங்களில் கூட்டங்களும் பிரசாரங்களும் நடைபெற்று வருகின்றன.

# பண்ணையாளர்களின் ஆர்ப்பாட்ட வழக்கு 30வரை ஒத்திவைப்பு

(செங்கலடி செய்தியாளர்)

மட்டக்களப்பு, மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்களால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான வழக்கு இம்மாதம் 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2023 ஒக்டோபர் 08ஆம் திகதி மட்டக்களப்பு, செங்கலடி பகுதிக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகையின்போது கொம்மாதுறை பகுதியில் - மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல்தரை பிரச்சினைக்குத் தீர்வு கோரி வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், பண்ணையாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், காணாமலாக்கப்பட்டோர் சங்க உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட 30 பேருக்கு எதிராக ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்நிலையில் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி மதுஜலா கேதீஸ்வரன் முன்னிலையில் இடம்பெற்ற இதுதொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பிரதிவாதிகள் தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆஜராகியமை குறிப்பிடத்தக்கது.



ஏறாவூர் பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய ஏ.சி. அஹமட் அப்கர் பதவியுயர்வு பெற்று அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளராக திங்கட்கிழமை (21) பதவியேற்றார். இந்நிகழ்வில் காத்தான்குடி பிரதேச செயலாளர் திருமதி நிஹாரா, அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.ரீ.எம்.இர்பான், உதவிப் பிரதேச செயலாளர் நஹீஜா முஸாபீர், ஏறாவூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். இதன்போது புதிய செயலாளர் நினைவுச் சின்னம் வழங்கியும் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டார்.

(திராய்க்கேணி செய்தியாளர்)







சித்திரைப் புத்தாண்டை சிறப்பிக்கும் முகமாக வந்தாறுமூலை கிழக்கு சக்தி விளையாட்டுக் கழகத்தினரும் பொதுமக்களும் இணைந்து ஏற்பாடு செய்த கிராமிய விளையாட்டு விழா இறுதி நாள் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (20) சக்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதன்போது போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

(வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)

# பளை பொதுச் சந்தைக்கு செல்லும் நுழைவாயிலில் மண் கொட்டப்பட்டதால் பொதுமக்கள் சிரமம்



(பு.கஜிந்தன்)

கிளிநொச்சி, பச்சிளைப்பள்ளி பளை பொதுச் சந்தைக்கு செல்லும் பிரதான நுழைவாயில் இரு புறமும் மணல் கொட்டப்பட்டு பரவிக் காணப்படுவதால் மக்கள் சந்தைக்கு சென்று பொருட்களை கொள்வனவு செய்ய மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர்.

பளை பொதுச் சந்தை கட்டிடத் தொகுதியானது தினம் தினம் மக்கள் வருகை தரும் முக்கிய இடமாக இருப்பதுடன், மீன் சந்தை மற்றும் மரக்கறி சந்தை என்பன அருகருகே காணப்படுகின்றன.

இச்சந்தைக்கு உட்செல்லும் இரு புற பாதைகளிலும் மணல் கொட்டப்பட்டு பரவிக் காணப்படுவதால் தமது அன்றாட செயற்பாடுகளை செய்ய மிகவும் சிரமப்பட்டு வருவதாகவும் மற்றும் முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிளில் வருபவர்கள் தாம் தமது வாழ்வாதார நடவடிக்கைகளுக்காக தினம் வரும் கட்டாயத்தில் இருப்பதாகவும் இவ் வீதியானது இவ்வாறே தொடர்ந்து காணப்படுவதால் தமது வாகனங்கள் இலகுவில் பழுதடைவதாகவும் தமது ஆதங்கத்தை தெரிவிக்கின்றனர்.

மேலும், நுழைவாயிலில் வீதி புனரமைப்பு தொடர்பான சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் வீதியினை மிக விரைவில் புனரமைப்பு செய்து தருமாறு கேட்டு நிற்கின்றனர்.

# சைவப்புலவர் பரீட்சைக்கான திகதி அறிவிப்பு

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்படுகின்ற 2025ஆம் ஆண்டுக்குரிய இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைகள் எதிர்வரும் மே மாதம் 16, 17, 18ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைகள் யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயம், மட்டக்களப்பு ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

இதற்கிணங்க மே 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு வரலாறு, 17ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 09 மணிக்கு சாத்திரம், பி.ப. 02 மணிக்கு உரைநடை, 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 09 மணிக்கு இலக்கியம், பி.ப. 02 மணிக்கு இலக்கணம் ஆகிய பாடங்களுக்குரிய பரீட்சைகள் நடைபெறும்.

பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் மே மாதம் முதல் வாரத்தில் அவரவர்களின் தனிப்பட்ட முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என அறிவித்துள்ளார்.

# அனைத்து பிரஜைகளும் அமைதியுடனும் நல்லிணக்கத்துடனும் வாழும் ஒரு நாட்டை அடுத்த தலைமுறைக்கு வழங்க வேண்டும்

## பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய வலியுறுத்து





அனைத்து பிரஜைகளும் அமைதியுடனும் நல்லிணக்கத்துடனும் வாழும் ஒரு நாட்டை அடுத்த தலைமுறைக்கு வழங்க வேண்டியது அவசியமாகும். பொதுமக்களின் விவகாரங்கள் குறித்து அரசாங்கம் அக்கறையுடன் உள்ளது என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

செட்டிகுளம், மனிக் பாம் சனசமூக அபிவிருத்தி நிலையம் மற்றும் உக்குளங்குளம் விளையாட்டு மைதானம் ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் (20) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது வரலாற்றில் அதிக எண்ணிக்கையிலான பெண் உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்றம் இதுதான். முன்பு, 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 5%க்கும் குறைவான பெண்களே பிரதிநிதித் துவப்படுத்தப்பட்டனர். ஆனால் இந்த நாட்டின் சனத்தொகையில் 52 வீதமானவர்கள் பெண்களாகும்.

இந்த நாட்டில் பொருளாதாரத்தைப் பாதுகாப்பதிலும் குடும்ப அலகைப் பராமரிப்பதிலும் சமூகத்தைப் பராமரிப்பதிலும் சிறப்பாகப் பணியாற்றும் பெண்களின் பிரதிநிதித்துவம் எம்மிடம் மிகக் குறைவாகவே உள்ளது. எனவே அடுத்த தேர்தலில் வன்னி மாவட்டத்திலிருந்து சகோதர உறுப்பினர்களை மட்டுமல்ல, சகோதரிகளான உறுப்பினர்களையும் பாராளுமன்றத்துக்கு அனுப்புமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

வவுனியா தற்போது அபிவிருத்தியடைந்து வரும் நகரமாக உள்ளது. ஒரு உள்ளூராட்சி மன்றத்தினால் நடக்க வேண்டிய விடயங்கள் நடைபெற வேண்டும். கிராமத்தின் வளர்ச்சியில் உள்ளூராட்சி மன்றம் செயற்றிறமாக தலையிட வேண்டும்.

வடபகுதி மக்களுக்கு கல்வி மிகவும் முக்கியமானது என்பதை நாங்கள் அறிவோம். நீங்கள் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறீர்கள். பொதுவாக, நாட்டில் கல்வி வீணடிக்கப்பட்டு பலவீனப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளது. குறிப்பாக, வடக்குப் பகுதி கல்வித் துறைக்கு போதுமான கவனம் செலுத்தப்படாததால், மற்ற பகுதிகளை விட மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. இதற்கிடையில், நான் இன்னும் ஒரு பயங்கரமான விடயம் பற்றி அறிந்தேன். இளைஞர் யுவதிகள் கல்வியின் மீது வைத்திருக்கும் மதிப்பு குறைந்து வருகிறது. போதைப்பொருள் மற்றும் மது இப்போது எல்லா இடங்களிலும் சாதாரணமாக கிடைக்கிறது. இவற்றில் இருந்து விலகி இளைஞர்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு இங்கே வேறு வழிகள் இல்லை. விஞ்ஞானம், கலை, நாடகம் போன்ற துறைகளில் வளர்ச்சி இல்லாததால் அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கான வழியை இழந்துவிட்டனர். எனவே இதற்கு ஒரு பெரிய தலையீடு தேவை என்பதை உணர்ந்தேன்.

ஊழல் இல்லாத ஒரு குழுவை நீங்கள் தெரிவுசெய்தால், நாங்கள் உங்களுக்காக ஒதுக்கும் பணத்தை பயமின்றி ஒப்படைக்க முடியும். உங்கள் கிராமத்தின் வளர்ச்சிக்கு இதைப் பயன்படுத்த முடியும். அதனால்தான் உங்கள் தெரிவு எங்களுக்கு முக்கியமானது என்று பிரதமர் கூறினார்.

இந்நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். திலகநாதன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஜெகதீஸ்வரன் உட்பட உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கப்பலோட்டிய நாங்கள் காகிதக் கப்பலில் பயணிக்க மாட்டோம் வல்வை மக்கள் ஜே.வி.பியிடம் உரத்துச் சொல்லவேண்டும்

## தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன்

(பு.கஜிந்தன்)

''பாராளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பியை நம்பித் தமிழ் மக்களில் கணிசமானோர் வாக்களித்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கையில் ஊரும் நமதே என்று சகல உள்ளூராட்சி மன்றங்களையும் கைப்பற்றிவிட வேண்டும் என்று ஜே.வி.பி. கடுமையாக முயற்சித்து வருகிறது. உலகில் ஈழத்தமிழினத்தின் முகவரியாக விளங்கும் வல்வெட்டித்துறையைக் கைப்பற்றிவிட வேண்டும் என்பதில் மிகத் தீவிரமாக உள்ளது. ஜே.வி.பியினர் வல்வை மண்ணில் முகாமிட்டுத் தங்களை நம்புங்கள் கரை சேர்ப்போம் என்று முழங்குகிறார்கள். கப்பலோட்டிய நாங்கள் காகிதக் கப்பல்களில் பயணிக்க மாட்டோம் என்ற பதிலை வல்வெட்டித்துறை மக்கள் இந்தத் தேர்தலில் ஜே.வி.பியிடம் உரத்துச்சொல்ல வேண்டும்'' என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வல்வெட்டித்துறை நகரசபையில் போட்டியிடும் தமிழ்த்தேசியப் பேரவையின் வேட்பாளர்களை அறிமுகம் செய்துவைக்கும் கூட்டம் கடந்த சனிக்கிழமை (19) வல்வெட்டித்துறை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொ.ஐங்கரநேசன் வல்வை மக்களிடம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

''வல்வெட்டித்துறை மக்கள் அறிவுத்திறன் மிக்கவர்கள். தொழில்நுட்பம் வளர்ச்சியடையாத



காலத்திலேயே நூற்றுக்கணக்கான கப்பல்களைக் கட்டித் திரைகடலோடித் திரவியம் தேடியவர்கள். இவர்களது கப்பல்கள்தான் இரண்டாம் உலக யுத்த காலத்தில் உணவுப் பொருட்களைச் சுமந்துவந்து இலங்கை மக்களைப் பட்டினியில் இருந்து காப்பாற்றின. பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடம் இருந்து சிங்களத் தலைவர்களைக் காப்பாற்றித் தலைமறைவாகத் தமிழகம் கொண்டுசென்று சேர்ப்பித்தன. அன்னபூரணி அம்மாள் என்ற கப்பலின் கட்டுமான அழகில் மயங்கிய அமெரிக்கர்கள் அதனை வாங்கி வல்வை மண்ணின் மாலுமிகளின் உதவியோடு அமெரிக்காவுக்குக் கொண்டு சென்றார்கள்.

வல்வெட்டித்துறை மக்கள் தொன்றுதொட்டுத் தினந்தினம் கடல் அலைகளோடு போராடி வாழ்ந்தவர்கள். இதனால், இயல்பாகவே திடகாத்திரம் உள்ளவர்களாகவும் மரண பயம் அற்றவர்களாகவும் வீரம் செறிந்தவர்களாகவும் திகழ்ந்தார்கள். ஆயுதப் போராட்டம் முளைவிடுவதற்கு முன்பாகவே அத்துமீறிய சிங்களச் சிப்பாய்களை நையப்புடைத்திருக்கிறார்கள். இதன் தொடர்ச்சியாகவே, வல்வை மண்ணில் இருந்து தனியாகக் கடற்படையொன்றை வைத்து ஆளும் அளவுக்கு தமிழினத்துக்கான தலைமை ஒன்று பரிணமித்தது. ஆனால், இந்த வரலாறுகள் எதுவும் தெரியாததாகவே எமது இளைய தலைமுறை உள்ளது.

எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடுகளையும் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டாலும் அது கருக்கொண்டதற்கான காரணங்கள் இன்னமும் அப்படியே நீடிப்பதையும் எமது இளைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்லாமல் எமது அரசியல் தலைவர்கள் தவறிழைத்துவிட்டார்கள். இதனாலேயே, காலங்காலமாகத் தமிழின விரோத நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து வந்த ஜே.வி.பியினால் இலகுவில் இங்கு காலூன்ற முடிகிறது. பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்ற ருசியில் இப்போது ஊரும் நமதே என்று வந்து நிற்கிறார்கள். ஆனால், ஊர் எங்களதுதான் என்ற தெளிவான பதிலைத் தமிழ் மக்கள் இம்முறை ஜே.வி.பிக்கு சொல்ல வேண்டும்'' என்றும் தெரிவித்தார்.

# தமிழரசுக் கட்சியின் புதுக்குடியிருப்பு பிரதேச வேட்பாளர்களை சந்தித்தார் ரவிகரன் எம்.பி.





(விஜயரத்தினம் சரவணன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதுக்குடியிருப்பு பிரதேசக் கிளைக்குட்பட்ட உள்ளூர் அதிகாரசபை வேட்பாளர்களுடன் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று (21) சந்தித்துக் கலந்துரையாடினார்.

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில், உள்ளூர் அதிகாரசபைத் தேர்தலை இலங்கைத் தமிழரசுக்கட்சி புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பில் பேசப்பட்டது.

அத்தோடு, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் காணப்படும் 07 உள்ளூர் அதிகாரசபை வட்டாரங்களையும் தமிழரசுக் கட்சி கைப்பற்றுவதற்கான ஆலோசனைகளும் இதன்போது வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்டன.


# ஸ்ரீ தலதா வழிபாட்டுக்குவரும் பக்தர்களுக்காக 24 மணி நேரமும் செயற்படும் சுகாதாரக் குழுக்கள்

தலதா மாளிகை வழிபாட்டுக்கு வரிசையில் கூடியிருக்கும் இலட்சக்கணக்கான மக்களை உள்ளடக்கி சுகாதார கண்காணிப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று கண்டி பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் சேனக தலகல தெரிவித்துள்ளார்.

இந்த காலகட்டத்தில் வெயிலில் நீண்ட நேரம் காத்திருக்கும் அனைத்து வயதினருக்கும் அவர்கள் கேட்டுக் கொண்டாலும் இல்லாவிட்டாலும் அவர்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க சுகாதார ஆலோசனை மற்றும் சிகிச்சை சேவைகளை வழங்குவது இந்த சுகாதார கண்காணிப்பு குழுக்களின் நோக்கமாகும்.

இந்நிலையில், குறித்த சுகாதார கண்காணிப்புக் குழுக்கள் 24 மணிநேரமும் செயற்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டுத் துப்பாக்கியுடன் சந்தேகநபரொருவர் கைது



(அநுராதபுரம் நிருபர்)

வெளிநாட்டு துப்பாக்கி ஒன்றை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை ஹொரவபொத்தான பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றுக்கமைய ஹொரவபொத்தான பொலிஸ் பிரிவின் பட்டியாவல பகுதியில் நேற்று முன்தினம் (20) நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேகநபரை கைதுசெய்துள்ளதுடன், போர 12 துப்பாக்கி ஒன்றையும் குற்றத்தடுப்புப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் ஹொரவபொத்தான, பட்டியாவல, பறங்கியாவாடிய பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 28 வயதுடையவர் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் துப்பாக்கியின் சீரியல் இலக்கம் என்பவற்றை கிறைண்டரினால் வெட்டி இனங்காண முடியாத வகையில் சேதப்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. துப்பாக்கியை பயன்படுத்தி குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளாரா என்பதை அறிந்துகொள்ளும் நோக்கில் தீவிர விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# கொஸ்லந்தை மாவட்ட வைத்தியசாலை விடுதியில் கஞ்சா

## விடுதி உரிமையாளர் – வைத்தியர் ஒருவர் கைது



(பதுளை நிருபர்)

பண்டாரவளை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவல்களின் அடிப்படையில் கொஸ்லந்தை மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் திடீர் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.அதன்போது 12 கஞ்சா செடிகளை கண்டுபிடித்ததையடுத்து, வைத்தியசாலை விடுதி உரிமையாளர் கைதுசெய்யப்பட்டார். இதேவேளை கொஸ்லந்தை மாவட்ட வைத்தியசாலை விடுதியில் தங்கியிருந்த வைத்தியர் ஒருவரையும் சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைதுசெய்துள்ளதாக தெரியவருகிறது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (21.04.2025)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 186.7409 | 196.3479 |
| கனேடியன் டொலர் | 212.1091 | 221.0045 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.5926 | 42.1550 |
| யூரோ | 337.5663 | 350.7711 |
| ஜப்பான் யென் | 2.0844 | 2.1653 |
| சிங்கப்பூர் டொலர் | 224.3401 | 234.1156 |
| ஸ்ரேலிங் பவுன் | 392.7333 | 407.0756 |
| சுவிஸ் பிராங் | 361.4318 | 378.0479 |
| ஐ.அ. டொலர் | 294.6708 | 303.3271 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 793.3119 |
| குவைட் | குவைட் தினார் | 975.4365 |
| ஓமான் | ஓமான் றியால் | 776.8679 |
| கட்டார் | கட்டார் றியால் | 82.0517 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 79.7086 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 81.4351 |

# திசைகாட்டி அரசாங்கத்தால் பொய்யை கோலோச்சும் கேவலமான அரசியல் முன்னெடுக்கப்படுகிறது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சாடல்





''எமது நாட்டில் ஆட்சிக்கு வந்துள்ள ஜே.வி.பி. அரசாங்கம் மக்களை ஏமாற்றி, தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை மீறி நடந்து வருகிறது. ஒட்டுமொத்த 2.2 மில்லியன் மக்களையும் ஏமாற்றி வருவதை மக்கள் இன்று நன்கு உணர்ந்துள்ளனர். விவசாயப் பகுதிகளில் அடுத்த போகத்துக்குரிய பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. என்றபோதிலும், உர மானியம் இதுவரை அவர்களுக்கு கிடைக்கவில்லை. பயிர்ச் சேதங்களுக்கு இழப்பீடுகளோ கிடைக்கவில்லை. யானை - மனித மோதலால் பாதிக்கப்பட்ட மக்களின் பயிர்கள், உடைமைகள் மற்றும் உயிர்ச்சேதங்களுக்கு இன்னும் இந்த அரசாங்கம் தீர்வு காணவில்லை''- என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிமித்தம் பொலனறுவைத் தேர்தல் தொகுதியில் நேற்று முன்தினம் (20) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''இம்முறை உரங்களின் விலையும் அதிகரித்து வரும் சூழ்நிலையில், விவசாயிகளைத் தூக்கி விடுவோம், விவசாயிகளைப் பாதுகாப்போம், விவசாயிகளைக் கடவுளாகக் கருதுகிறோம் என்று கூறிய திசைகாட்டி தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணியினர் ஒட்டுமொத்த விவசாய சமூகத்தினரையும் அழிக்கும் கொள்கையை முன்னெடுத்து வருகின்றனர்.

இன்று மக்கள் வாழ முடியாத அளவுக்கு பொருட்களின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. பொருட்களின் விலைகள் தாறுமாறாக அதிகரித்துள்ளன. பொதுமக்களுக்கு ஒன்றும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மூன்று வேளை உணவு கூட சாப்பிட முடியாத நிலையை நாடு எட்டியுள்ளது. அத்தியாவசிய உணவு மற்றும் பாடசாலைப் பொருட்கள் என்பவற்றுக்கு VAT வரிகளும் விதிக்கப்பட்டுள்ளன. மேலும், அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அரிசி, பால் மா, தேங்காய், உப்பு ஆகியவற்றின் விலைகளும் அதிகரித்துள்ளன.

இவ்வாறான நிலையில், திசைகாட்டிக்கு அதிகாரம் கிடைக்காத சபைகளுக்கு நிதியொதுக்க மாட்டோம் எனக் கூறி மக்களை ஏமாற்றி வருகின்றார் ஜனாதிபதி. பொய், ஏமாற்று அடிப்படையிலான அரசியலுக்கு அதிக ஆயுட்காலம் இல்லை. மின்கட்டணத்தை 33% குறைப்போம் என்று இந்த ஆளும் தரப்பினர் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் கூறினர். மக்கள் எழுச்சியால் தான் 20% ஆவது மின்கட்டணம் குறைக்கப்பட்டது. அரசாங்கம் தீர்மானமெடுத்து இதனை நிறைவேற்றவில்லை. மக்களின் கருத்துகளுக்கேற்பவே இது குறைக்கப்பட்டது. எஞ்சிய 13% குறைப்பை இந்த அரசாங்கம் விரைந்து எடுக்க வேண்டும். எரிபொருள் விலைகள் தொடர்பில் அரசாங்கம் இவ்வாறான கொள்கைகளைப் பின்பற்றி வருகிறது. புதிய அரசாங்கத்தில் மக்கள் கண்ட பயன் எதுவும் இல்லை. சுத்த பொய்களைக் கொண்டு மக்களை ஏமாற்றி வரும் இந்த அரசியலைக் கண்டு மக்கள் ஏமாந்துவிடக் கூடாது''- எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுமாயின் நீதிமன்றங்கள் நடவடிக்கை எடுக்குமே தவிர அரசியல்வாதிகள் அல்ல

## ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ்





(பு.கஜிந்தன்)

அரசியல் நலன்களுக்காக தேர்தல் மேடைகளிலும் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களிலும் அரசியல் செயற்பாட்டாளர்களின் கைதுகள் தொடர்பாகப் பேசப்படுவதைச் சுட்டிக்காட்டிய ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, யாருக்கு எதிராகவேனும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுமாயின் அவை தொடர்பாக நீதிமன்றங்களும் நீதிக் கட்டமைப்புகளும் நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர அரசியல்வாதிகள் அல்ல எனவும் தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள தேர்தல் ஆணைக்குழு தலைமையகத்தில் நேற்று (21) நடைபெற்ற கட்சித் தலைவர்களுக்கிடையிலான சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துகளை வெளியிட்ட செயலாளர் நாயகம் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நாடெங்கிலும் ஒரேநாளில் நடத்தப்படாமல் சிலவற்றுக்கான தேர்தல் திகதி ஒத்திவைக்கப்படுமாயின் முதலில் நடைபெறுகின்ற பிரதேசங்களின் தேர்தல் முடிவுகள் பின்னர் நடத்தப்படும் தேர்தல் முடிவுகளில் தாக்கத்தைச் செலுத்துமெனத் தெரிவித்ததுடன், குறித்த விடயங்கள் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு கவனத்தில்கொள்ள வேண்டும்''- என்றும் கேட்டுக்கொண்டார்.





கொடிகாமம் - வரணி பகுதியில் நீரில் மூழ்கி உயிரிழந்த சிலுசன் (23 வயது) என்ற இளைஞனின் இறுதிச் சடங்கு நேற்று (21) அவரது இல்லத்தில் நடைபெற்று ஆயிரக்கணக்கான மக்களின் கண்ணீருடன் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. (பு.கஜிந்தன்)

# தேசிய மக்கள் சக்திக்கு தமிழர்கள் வாக்களிப்பது சொந்தக் காசில் சூனியம் வைத்துக்கொள்வது போன்றதே

## முன்னாள் எம்.பி. சந்திரகுமார்





'' உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தால் அது தமிழ் மக்கள் தங்களுடைய சொந்தக் காசில் சூனியம் வைத்துக்கொண்டதற்கு நிகராகிவிடும்''- என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்தார்.

கிளிநொச்சி, அம்பாள்குளம் கிராமத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களை ஆதரித்து இடம்பெற்ற கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சித் தேர்தல் மிக முக்கியமான காலகட்டத்தில் இடம்பெறுகிறது. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி அதன் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களைத் தொடர்ந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே, உள்ளூர் அதிகாரங்கள் அந்தந்த உள்ளூர் தரப்பினர்களிடமே இருக்க வேண்டும். அதிகாரப் பகிர்வுக்காகப் போராடிய - அதற்காகப் பல தியாகங்களைச் செய்த இனம் நாங்கள். அந்தத் தியாகங்களுக்கீடாக தீர்வுகள் இதுவரை கிடைக்காத போதிலும் கிடைத்த இந்த உள்ளூர் அதிகாரத்தையாவது நாம் தொடர்ந்தும் எங்களுக்குள் வைத்திருக்க வேண்டும். அதுவே தமிழினத்தின் எதிர்கால அரசியல் உரிமைகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நகர்வுகளுக்கு பலம் சேர்க்கும்.

ஆகவே, தமிழ் மக்கள் நாட்டில் ஏற்பட்ட ஒரு பொதுவான ஓர் அலையில் சிக்குண்டு செல்வார்களெனில் அந்த அலை தமிழ் மக்களைச் சிதைத்து சின்னாபின்னமாக்கிவிடும். இந்த அலை என்பது இந்த நாட்டிலுள்ள சிறுபான்மை இனங்களைக் குறிப்பாக, வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை மிக மோசமாகப் பாதிக்கும் அலை. இந்த அலைக்குள் சிக்குண்டால் ஒருபோதும் கரைசேர முடியாது போய்விடும்.

எனவே, வருகின்ற உள்ளூராட்சித் தேர்தலில் எங்கள் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். கிளிநொச்சி மாவட்டத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் சங்கு சின்னத்தில் மக்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உள்ள மக்களுக்காக அர்ப்பணிப்போடு பணியாற்றக் கூடிய வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அவர்களை ஆதரித்து வாக்களித்து வெற்றிபெறச் செய்யுங்கள்''- எனத் தெரிவித்தார்.



# ஸ்ரீ சத்ய சாயி பாபா ஆராதனா மஹோற்சவம்

கொழும்பு, புதுச்செட்டித் தெரு சாயி மத்திய நிலையத்தில் நாளைமறுதினம் (24) வியாழக்கிழமை ஸ்ரீ சத்ய சாயி பகவானின் மகா சமாதி தின ஆராதனா மஹோற்சவம் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு பிரசாந்தி கொடியேற்றத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும். தொடர்ந்து பாபாவின் திருவுருவச் சிலைக்கு புனித நீராடல் மற்றும் ஓங்காரம், சுப்ரபாதம் என்பனவும் இடம்பெறும். காலை 11.00 மணிக்கு சாயி பூஜை, பஜனை வழிபாடு நடைபெற்று நண்பகல் அன்னதானம் வழங்கப்படும்.

அன்றையதினம் மாலை 4 மணிக்கு, புட்டபர்த்தி மகா சமாதியில் வைத்து பூஜித்து எடுத்துவரப்பட்ட பாபாவின் ஐம்பொன் திருவுருவச் சிலைக்கு நவாபிஷேகம் இடம்பெற்று மங்கல ஆரத்தியும் நடைபெறும். மகா சமாதியை முன்னிட்டு ஒரு பூர்வாங்க நிகழ்வாக நாளை (23) புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு ருத்ரயாகம் இடம்பெறும்.

# மல்வானை நகரில் முஸ்லிம் காங்கிரஸின் உள்ளூராட்சித் தேர்தல் அலுவலகம் திறப்பு



(ஹனபி எம். தாஸீம்)

பியகம தேர்தல் தொகுதிக்குட்பட்ட மல்வானை நகரில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உள்ளூராட்சித் தேர்தல் அலுவலகம் நேற்று முன்தினம் (20) இரவு உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பியகம பிரதேச சபை வேட்பாளர் பாயிஸ் அஹமட் தலைமையில் இக்காரியாலய திறப்புவிழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் நிசாம் காரியப்பர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு தேர்தல் அலுவலகத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பியகம பிரதான அமைப்பாளரும் பியகம பிரதேச பிரதம வேட்பாளருமான பியகம பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம்.என். எம். இர்ஷாத், மல்வானை நகர வேட்பாளர் பாயிஸ் அஹமட் மற்றும் வல்கம மேற்கு பிரதேச வேட்பாளர் மொஹமட் ஜவான் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# ஒலுவில் மக்கள் வங்கிக் கிளை புதிய கட்டிடத்துக்கு இடமாற்றம்









(கோணாவத்தை நிருபர்)

ஒலுவில் பிரதேசத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளை புதிய கட்டிடத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளது. இதுதொடர்பான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று (21) இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை மக்கள் வங்கியின் முகாமையாளர் எஸ். எம்.ஏ.ஜவாத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மக்கள் வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் ஆர்.ரவீகரன், கௌரவ அதிதிகளாக பிராந்திய முகாமையாளர் கே.எம்.பீ. பீ.குலதுங்க, உதவிப் பிராந்திய முகாமையாளர்களான ஆர்.ஆர்.எம்.எஸ்.பம்பரதெனிய, எஸ்.எம்.மோகனதாஸ்,விசேட அதிதிகளாக அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அமானுல்லா, செயலாளர் எல்.எம். இர்பான் மற்றும் வங்கி முகாமையாளர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

சுமார் 20 வருடங்களுக்கு மேலாக இயங்கி வந்த மக்கள் வங்கிக் கிளையானது புதிய கட்டிடத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளமையையிட்டு வாடிக்கையாளர்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். இங்கு ஏ.ரீ.எம். இயந்திரமும் நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## Now you can subscribe the following Newspapers

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE


Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209

# இறைபதமடைந்தார்

# பாப்பரசர் பிரான்சிஸ்

(1936 - 2025)





உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் (20) வத்திக்கான் செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் மக்களைச் சந்தித்து ஆசி வழங்கிய பாப்பரசர் பிரான்சிஸ்...

கத்தோலிக்க திருச்சபை தலைமை மதகுரு பாப்பரசர் பிரான்சிஸ் தனது 88ஆவது வயதில் நேற்று (21) காலமானார்.

உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த பாப்பரசர் பிரான்சிஸ், உடல்நலம் பெற்று மீண்டு வர உலகம் முழுவதும் மக்கள் பிரார்த்தனை செய்துவந்த நிலையில், அவரது மறைவுச் செய்தி பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாப்பரசர் பிரான்சிஸ், ரோம் நேரப்படி நேற்று (21) காலை 7.35 மணிக்கு உயிரிழந்தார். அவரது மறைவை வத்திக்கான் தேவாலய நிர்வாகம் உறுதிசெய்துள்ளது. மறைந்த பாப்பரசர் பிரான்சிஸின் பூதவுடல் வத்திக்கானிலுள்ள அவரது இல்லத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

பாப்பரசரின் மறைவுக்கு உலகத் தலைவர்கள், மதத் தலைவர்கள், பிரபலங்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பல்வேறு தரப்பினரும் தமது இரங்கலைத் தெரிவித்து வருகின்றனர்.

கத்தோலிக்கத் திருச்சபையின் 266ஆவது திருத்தந்தையாக 2013ஆம் ஆண்டில் தெரிவுசெய்யப்பட்ட பாப்பரசர் பிரான்சிஸ், சமூகநீதி, எளிமை, கருணை ஆகியவற்றில் முக்கிய பங்கு வகித்தார். கடந்த பெப்ரவரி 14ஆம் திகதி உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்ட நிலையில், ரோம் நகரின் ஜெமெல்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு மேற்கொள்ளப்பட்ட உடல் பரிசோதனைகளில் நுரையீரல் தொற்று, சுவாசக் குழாய் பாதிப்பு மற்றும் இரட்டை நிமோனியாவால் பாதிக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது. இதனையடுத்து அவருக்கு செயற்கை சுவாசமளிக்கப்பட்டு வந்ததுடன், அவர் மருத்துவர்களின் தீவிர கண்காணிப்பில் இருந்துவந்தார். இந்நிலையில், பாப்பரசர் உடல் நலம் பெறவேண்டி உலகம் முழுவதும் மக்கள் பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், கடந்த பெப்ரவரி 23ஆம் திகதி பாப்பரசருக்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் அவருக்கு சிறுநீரகம் பாதிக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது. இதையடுத்து தொடர்ந்து 38 நாட்கள் சிகிச்சை பெற்றுவந்த பாப்பரசர் பிரான்சிஸ் உடல்நலம் தேறிய நிலையில், மார்ச் 23ஆம் திகதி வத்திகானிலுள்ள தனது இல்லத்துக்குத் திரும்பினார். எனினும், தொடர்ந்தும் மருத்துவர்களின் கண்காணிப்பிலேயே இருந்து வந்தார்.

## ஈஸ்டர் திருநாளையொட்டி ஆசீர்வாதம்

உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு பாப்பரசர் பிரான்சிஸ் நேற்றுமுன்தினம் (20) வத்திக்கான் நகருக்கு வந்தார். அங்கு வத்திக்கான் செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் மக்களைச் சந்தித்து ஆசி வழங்கியிருந்தார்.

சதுக்கத்தில் குழுமியிருந்த மக்களைப் பார்த்து சந்தோஷத்துடன் கையசைத்த பாப்பரசர் பிரான்சிஸ், ''சகோதர, சகோதரிகளே அனைவருக்கும் ஈஸ்டர் தின வாழ்த்துகள்'' என்று வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிலையில், நேற்று (21) காலை 7.35 மணியளவில் வத்திக்கானிலுள்ள தனது இல்லத்தில் (Vatican's Casa Santa Marta) காலமானதாக வத்திக்கான் தகவல் வெளியிட்டுள்ளது.

தென் அமெரிக்காவிலிருந்து கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமை மதகுருவாகத் தெரிவுசெய்யப்பட்ட முதல் திருத்தந்தை பாப்பரசர் பிரான்சிஸ் என்பது குறிப்பிடத்தக்கது. 2013ஆம் ஆண்டு மார்ச் 13ஆம் திகதி கத்தோலிக்கத் திருச்சபையின் 266ஆவது திருத்தந்தையாக அவர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

ஆர்ஜென்ரீனாவில் பிறந்த பாப்பரசர் பிரான்சிஸ், 12 ஆண்டுகளாக கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமை மதகுருவாக பொறுப்பு வகித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி 14ஆம் திகதி நிமோனியா நோயினால் பாதிப்படைந்து வைத்தியசாலையில் 38 நாட்கள் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், கடந்த மாதம் மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பி, மருத்துவர்களின் ஆலோசனைப்படி ஓய்வெடுத்து வந்தார்.

போர்களை முடிவுக்குக் கொண்டுவந்து உலகில் அமைதியை நிலைநாட்ட வேண்டுமென பாப்பரசர் பிரான்சிஸ் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். தன்னுடைய 22 வயதில் கிறிஸ்தவ சமுதாயத்துக்காக சேவையாற்றத் தொடங்கிய பாப்பரசர் பிரான்சிஸ், உடல்நிலை பாதிப்பு காரணமாக சிறு வயதிலேயே ஒரு நுரையீரலை இழந்தவர்.

கடந்த 2013 மார்ச் 13ஆம் திகதியன்று மழை பெய்த ஓர் இரவுக்குப் பின்னர், ஆர்ஜென்ரீனாவில் பிறந்த ஜோர்ஜ் மரியோ பெர்கோக்லியோ என்ற பெயர்கொண்ட பாப்பரசர் பிரான்சிஸ், 2,000 ஆண்டுகள் பழமையான கத்தோலிக்கத் திருச்சபைக்குப் புத்துணர்ச்சியைக் கொண்டுவந்தவர்.

## யார் இந்த பாப்பரசர் பிரான்சிஸ்

பாப்பரசர் பிரான்சிஸ் கடந்த 1936ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் திகதி ஆர்ஜென்ரீனாவிலுள்ள பியூனஸ் ஐரஸ் என்ற இடத்தில் பிறந்தார். இவரின் பெற்றோர் இத்தாலியிலிருந்து ஆர்ஜென்ரீனாவுக்கு குடிபெயர்ந்தவர்கள். இத்தம்பதியின் 5 குழந்தைகளில் ஒருவர்தான் பாப்பரசர் பிரான்சிஸ்.

ஜோர்ஜ் மாரியோ பெர்கோலியோ என்ற இயற்பெயர்கொண்ட இவர், தனது 20ஆவது வயதில் pleurisy என்ற அழற்சியால் பாதிக்கப்பட்ட நிலையில் நுரையீரலின் ஒருபகுதி அகற்றப்பட்டுள்ளது. உடல்நலக்குறைவையும் பொருட்படுத்தாமல் தனது கல்வியைத் தொடர்ந்த ஜோர்ஜ் மாரியோ பெர்கோலியோ, வேதியியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றார்.

உடல்நலப் பாதிப்பு தந்த வெற்றிடமும் இயேசுகிறிஸ்து மீதான ஈர்ப்பும் இயேசு சபையில் 1958ஆம் ஆண்டு அவரை இணைய வைத்தது. யூனஸ் அயர்ஸ் உயர்மறைமாவட்டத்தின் பேராயராகப் பணியாற்றி, எளிமையான வாழ்க்கை நடத்தி வந்தார். பேராயர் என்ற முறையில் அவருக்குப் பெரியதொரு மாளிகை இல்லமாக இருந்தபோதிலும் அவர் ஓர் எளிய, சிறிய கட்டடத்தில் வாழ்ந்து வந்தார்.

இந்நிலையில், தனி சாரதியைக்கொண்ட சொகுசு கார் தமக்கு அளிக்கப்பட்டபோதும் அது வேண்டாமெனக் கூறி பொது போக்குவரத்திலேயே பயணம் செய்தார். சமையலுக்கென்று தனி ஆள் வைக்காமல், அவர் தமக்கு வேண்டிய உணவைத் தாமே சமைத்துக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## 266ஆவது திருத்தந்தையாக தெரிவு

இப்படி பொது வாழ்வுக்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்ட பாப்பரசர் பிரான்சிஸ், 2013ஆம் ஆண்டு 16ஆவது பாப்பரசர் பெனடிக்ட் இராஜிநாமா செய்ததைத் தொடர்ந்து கத்தோலிக்கத் திருச்சபையின் 266ஆம் திருத்தந்தையாகத் தெரிவு செய்யப்பட்டார்.

திருத்தந்தை அசிசியின் பிரான்சிஸின் நினைவாக பிரான்சிஸ் என்பதை தனது ஆட்சி பெயராகவும் தெரிவு செய்தார். தென் அமெரிக்காவிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட முதல் திருத்தந்தை பாப்பரசர் பிரான்சிஸ் ஆவார். இயேசு சபையிலிருந்து திருத்தந்தைப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்ட முதல் நபரும் இவராவார். மூன்றாம் கிரகோரிக்குப் பின்பு 1,200 ஆண்டுகளில் ஐரோப்பாவுக்கு வெளியே இருந்து தெரிவுசெய்யப்பட்ட முதல் திருத்தந்தை என்ற சிறப்பும் இவருக்குண்டு.

இவர் தம் தாய்மொழியாகிய எசுப்பானியம், தம் பெற்றோரின் பூர்வீக மொழியான இத்தாலியம், இலத்தீன், செருமானியம், ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளை நன்கு பேச அறிந்தவர்.

## எய்ட்ஸ் நோயாளியின் கால்களை முத்தமிட்ட பாப்பரசர்

அனைவரும் சமம் என்ற சமூகநீதி கொள்கைகளைக் கொண்ட பாப்பரசர் பிரான்சிஸ், எச்.ஐ.வி. உள்ளிட்ட பாதிப்புகளால் ஒதுக்கித் தள்ளப்பட்ட நோயாளிகள் மீது பரிவு காட்டி வந்தார். 2001இல் எய்ட்ஸ் நோயாளி ஒருவரின் இல்லம் சென்று, அங்கு அவரது கால்களைக் கழுவி முத்தமிட்டு, அவர்கள் மீதான தனது பரிவை வெளிப்படுத்தினார். அகதிகளுக்கும் புலம்பெயர்வோருக்கும் எப்போதும் தனது ஆதரவை வழங்கி வந்தார் பாப்பரசர் பிரான்சிஸ்.

போரில்லாத அமைதியான உலகுக்காக தொடர்ந்து குரல் கொடுத்துவந்த பாப்பரசர் பிரான்சிஸ், உலகில் அடிமை



முறையை முற்றிலும் ஒழிக்க வேண்டுமென வலியுறுத்தி வந்தார். அதேசமயம், பெண்களின் சில குறிப்பிட்ட உரிமைகள் தொடர்பான பிரச்சினையில் அடிப்படைவாத கொள்கை கொண்டவராக பாப்பரசர் பிரான்சிஸ் விமர்சிக்கப்பட்டார். திருமண முறிவு, கருக்கலைப்பு, கருத்தடைக்கான உரிமை உள்ளிட்டவற்றில் பெண்களுக்கு எதிரான நிலைப்பாட்டை அவர் எடுத்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டார்.

கருணைக் கொலை செய்வதைக் கடுமையாக எதிர்த்த பாப்பரசர், திருநங்கை, திருநம்பி, ஓரினச் சேர்க்கையாளர்கள் உள்ளடக்கிய எல்ஜிபிஇடி அமைப்பின் செயற்பாடுகளைக் கடுமையாக எதிர்த்தார். அதேசமயம், அவர்கள் கண்ணியத்துடன் நடத்தப்பட வேண்டுமென்பதிலும் அவர் உறுதியாக இருந்தார்.

## ஆசிரியராகப் பணியாற்றிய பாப்பரசர்

பாடசாலை மற்றும் கல்லூரிப் படிப்பை முடித்த பாப்பரசர், 1969இல் கத்தோலிக்க பாதிரியாராக மாறினார். தொடர்ந்து கிறிஸ்தவ மத சேவைகளில் அவர் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார். அதன் பிறகு பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றி வந்த இவர், 2001இல் கர்தினாலாக நியமிக்கப்பட்டார். மேலும், 2005இல் பெனடிக்ட் XVI திருத்தந்தையைத் தெரிவுசெய்யும் குழுவிலும் இவர் இருந்தார்.

கடந்த 2013ஆம் ஆண்டு அப்போது பாப்பரசராக இருந்த பாப்பரசர் பெனடிக்ட் உடல்நலக்குறைவு காரணமாகத் தனது பதவியை இராஜிநாமாச் செய்தபோது புதிய பாப்பரசராக இவர் தெரிவுசெய்யப்பட்டார். அப்போதுதான் 'பிரான்சிஸ்' என்ற பெயர் வழங்கப்பட்டது.

எப்போதும் மக்களுடன் மக்களாக உலக பிரச்சினைகளுக்குத் தொடர்ந்து குரல் கொடுத்து வருபவராகப் பாப்பரசர் பிரான்சிஸ் இருந்துள்ளார். கொரோனா காலத்திலும் மக்களுக்காகப் பணியாற்றியிருக்கிறார். மேலும், உலகெங்கும்இடம்பெற்றுவரும் போர்களுக்கு எதிராகவும் குரல் கொடுத்துள்ளார். இது மட்டுமன்றி எப்போதும் மக்களுடன் இருந்த பாப்பரசராக பிரான்சிஸ் கருதப்படுகிறார். உடல்நிலை மோசமாக இருந்தபோதும் சக்கர நாற்காலியில் வந்து மக்களைச் சந்திப்பதை வாடிக்கையாகக்கொண்டிருந்தார். நிமோனியா உள்ளிட்ட உடல்நிலை பாதிப்பிலிருந்து மீண்ட போதும் கூட ஈஸ்டர் தினத்தில் இவர் மக்களைச் சந்தித்திருந்தது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், அவர் நேற்று (21) இவ்வுலகை நீத்தார்.

## எளிமையான முறையில் இறுதி ஏற்பாடுகள்

பாப்பரசரின் விருப்பப்படி அவரது இறுதிச் சடங்கை எளிமையாக நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவரது உடல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அடுத்த 4 முதல் 6 நாட்களில் இறுதிச்சடங்கு நடைபெறும். உலகெங்குமுள்ள தேவாலயங்களில் 9 நாட்களுக்குத் துக்கம் அனுஷ்டிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## உலகத் தலைவர்கள் இரங்கல்

கத்தோலிக்க கிறிஸ்தவ மதத் தலைவர் பாப்பரசர் பிரான்சிஸின் மறைவுக்கு உலகத் தலைவர்கள் பலரும் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வோன் டெர் லேயன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், "பாப்பரசர் பிரான்சிஸின் மறைவுக்கு உலகம் இன்று இரங்கல் தெரிவிக்கிறது. கத்தோலிக்கத் திருச்சபையைத் தாண்டி, அவர் தனது பணிவு மற்றும் ஏழைகள் மீதான தூய அன்பின் மூலம் கோடிக்கணக்கான மக்களை ஊக்கப்படுத்தினார். இந்த ஆழ்ந்த இழப்பை உணரும் அனைவருடனும் எனது எண்ணங்கள் உள்ளன. பாப்பரசரின் மரபு நம்மை நீதியான, அமைதியான மற்றும் இரக்கமுள்ள உலகத்தை நோக்கி தொடர்ந்து வழிநடத்தும். அவரது ஆன்மா ஆறுதல் காணட்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "பாப்பரசர் பிரான்சிஸ், சாந்தியடையட்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ள இரங்கல் பதிவில், ''புனித பாப்பரசர் பிரான்சிஸின் மறைவால் மிகுந்த வேதனையடைகிறேன். இந்தத் துயரமான தருணத்தில், உலகளாவிய கத்தோலிக்க சமூகத்துக்கு எனது மனமார்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். உலகெங்கிலுமுள்ள இலட்சக்கணக்கான மக்களால் கருணை, பணிவு மற்றும் ஆன்மீகத்தின் கலங்கரை விளக்கமாக பாப்பரசர் பிரான்சிஸ் எப்போதும் நினைவுகூரப்படுவார். கடவுளின் அரவணைப்பில் அவரது ஆன்மா நித்திய அமைதியைக் காணட்டும்" என்று தெரிவித்துள்ளார்.





# சுற்றுலாப் பயணிகளால் குப்பை மேடாக மாறிவரும் நுவரெலியா நகரம்





**(செ.திவாகரன்)**

நுவரெலியாவுக்குத் தினமும் உள்நாட்டு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் ஏராளமானோர் வருகைதருகின்றனர். குறிப்பாக, ஏப்ரல் முதலாம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை வசந்தகாலக் கொண்டாட்டம் நடைபெறுவதால் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். இயற்கை எழில் சூழ்ந்த நுவரெலியாவில் தற்போது எங்கும் குப்பைக் கூளங்களும் பிளாஸ்ரிக் கழிவுகளும் நிறைந்து காணப்படுவதாகப் பொதுமக்கள் விசனம் விசனம் தெரிவிக்கின்றனர்.

அதிகமான சுற்றுலாப் பயணிகள் கூடும் மையங்களில் குப்பைத் தொட்டிகளை வைக்க நடவடிக்கை எடுக்காதது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் சுற்றுச்சூழல் மாசுபடுவதுடன், இயற்கையும் பாதிக்கப்படுகிறது.

இப்பகுதிகளுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் உணவு, பிளாஸ்ரிக் குடிநீர்ப் போத்தல்கள், பொலித்தீன் பைகளில் கட்டப்பட்ட சில கழிவுப் பொருட்களை அதே இடங்களில் வீசிவிட்டுச் செல்கின்றனர். இவற்றை உட்கொள்வதற்காக கால்நடைகள் அப்பகுதிக்கு வருகின்றன. இக்கழிவுகளை நாய்கள், பறவைகள், மட்டக்குதிரைகள் நாலாபுறமும் இழுத்துச்சென்று போடுவதால் நடைபாதைகள் உட்பட நகரின் பல இடங்களும் மாசுபடுகின்றது.

குறிப்பாக, கண்ட கண்ட இடங்களில் கொட்டப்படும் குப்பை கூளங்களால் விலங்குகளுக்கும் நோய் அச்சுறுத்தல் ஏற்படுகிறது. சவாரிக்கு பயன்படுத்தும் மட்டக்குதிரைகளும் பாதிப்டைந்துள்ளன. அதாவது குப்பைகளை உட்கொள்ளும் மட்டைக் குதிரைகள் இறந்துகிடப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது.

நுவரெலியாவில் தற்போது அதிக இடங்களில் வீதியோரத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக வர்த்தக நிலையங்களில் சேகரித்துக் கொட்டப்படும் பிளாஸ்ரிக் பொருட்கள் தீ வைத்து எரிக்கப்படுகின்றன. இதனால் அதிக சுற்றுலாப் பயணிகள் கூடும் இடங்கள் புகை மண்டலங்களாக காட்சியளிக்கின்றன. இதேவேளை காற்று மாசு ஏற்படுவதோடு, சுற்றுச்சூழலும் பாதிக்கப்படுகிறது. அத்துடன், பிரதான வீதியோரத்தில் நடப்பவர்களும் வாகனங்களில் வருவோரும் முகத்தைத் துணியால் மூடியும், மூக்கில் கை வைத்தும் செல்கின்றனர். இவற்றை நுவரெலியா மாநகரசபை கண்டுகொள்வதில்லையென பொதுமக்கள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

எனவே, சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகை தரும் இடங்களில் தேவைக்கேற்ப குப்பைத் தொட்டிகளை வைப்பது அவசியமெனவும் அப்பகுதிகளுக்குப் பொறுப்பான சுகாதார அதிகாரிகள் இதனைக் கவனத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



*சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மடுல்கலை மவுசா தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கிடையிலான சிநேகபூர்வ மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ரிலேன்ஸ் மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. RIO BOYS அணியினரின் வாகனப் பேரணியோடு 3 நாட்கள் இடம்பெற்ற இப்போட்டியில் 95 KING RIDERS அணியினர் champion ஆகவும் Hunder Gamer அணியினர் Runners Up ஆகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.பெண்கள் அணியினருக்கும் பிரத்தியேகமாகப் போட்டிகள் நடைபெற்றன. வெற்றிபெற்ற அணியினருக்கு பாடசாலை அதிபர் கே.கிருஷ்ணகுமார் வெற்றிக்கேடயங்களை வழங்கிவைத்தார். (பன்விலை நிருபர்)*







*புத்தசாசன, சமய விவகார, கலாசார அமைச்சு சிறுவர்களுக்கான சித்திரம் வரையும் போட்டியொன்றை நேற்று முன்தினம் (20) கண்டியில் ஏற்பாடு செய்திருந்தது. கண்டியில் தற்போது இடம் பெற்று வரும் ஸ்ரீ தலதா கண்காட்சிக்கிணையாக இது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. புத்தசாசன, சமய விவகார, கலாசார அமைச்சர் கலாநிதி இனிதும சுனில் செனவி, பிரதி அமைச்சர் கமகெதர திசாநாயக்க மற்றும் அதிகாரிகளின் பங்களிப்புடன் ஸ்ரீ தலதா கண்காட்சி முடியும் வரை போட்டி இடம்பெறவுள்ளது. போட்டியில் பங்குபற்றும் சிறார்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

# காசல்ரீ நீர்த்தேக்கத்தை அண்டிய பகுதியில் கோழிக்கழிவுகளை கொட்டுவதால் துர்நாற்றம்

## சட்ட நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

**(மஸ்கெலியா நிருபர்)**

ஹட்டன் பகுதியில் கோழிப்பண்ணை மற்றும் கோழி இறைச்சி மொத்த விற்பனை செய்பவர்கள் நாளாந்தம் அதன் கழிவுகளை வாகனங்கள் மூலம் ஹட்டன் நோட்டன் பிரிட்ஜ் வீதியில் அமைந்துள்ள காசல்ரீ நீர்த்தேக்கத்தை அண்டிய பகுதியிலுள்ள பற்றைக்காடுகளுக்குள் போட்டுவிட்டுச் செல்வதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகவும் பாரிய சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதாகவும் அப்பகுதி வாழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

காசல்ரீ நீர்த்தேக்கத்தை அண்டிய பகுதியில் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தங்கும் விடுதிகள் உள்ளன.

அவற்றுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் , மாணவர்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்கள் சுகாதாரச் சீர்கேட்டை எதிர்நோக்கும் நிலையில் உள்ளதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த சில நாட்களாக புத்தாண்டு வியாபாரம் களைகட்டியதால் அதிகளவான கழிவுகளை இரவு வேளையில் பாரவூர்தி மற்றும் முச்சக்கர வண்டிகள் மூலம் இப்பகுதியில் கொட்டிவிட்டுச் சென்றுள்ளனர்.

இது குறித்து ஹட்டன் நகரசபை அதிகாரிகள் உடன் கவனஞ்செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பகுதி வாழ் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# தேசிய மக்கள் சக்தியின் வெற்றியை உறுதிப்படுத்தும் கூட்டம் நெடுங்கேணியில்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய பங்கேற்பு





**(வவுனியா நிருபர்)**

தேசிய மக்கள் சக்தியின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் பங்கேற்புடன் நெடுங்கேணி பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் (20) இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்தில் நடைபெற்ற பல பொதுக் கூட்டங்களில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பங்கேற்றார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக தேசிய மக்கள் சக்தியின் கீழ் வவுனியா மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்குப் போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றியை உறுதிசெய்யும் வகையில் பொதுக்கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அந்தவகையில், வவுனியா வடக்கு பிரதேச சபை வேட்பாளர்களுக்கு ஆதரவு வேண்டி வவுனியா, நெடுங்கேணி பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பிரதமர் கலந்துகொண்டார்.

இப்பொதுக் கூட்டத்தில் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், வவுனியா வடக்கு பிரதேச சபை வேட்பாளர்கள், பொதுமக்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# இலங்கைக்குரிய சுதேச மருத்துவம் இல்லாது அற்றுப்போகும் நிலை

## வைத்தியர் உமாதேவி எச்சரிக்கை

**(பு.கஜிந்தன்)**

''இலங்கைக்குரிய சுதேச மருத்துவம் இல்லாது அற்றுப்போகும் நிலை உருவாகியுள்ளது. இந்த நிலையை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்'' - என அனைத்திலங்கை வருங்கால சுதேச மருத்துவ அதிகாரிகள் சேவைச் சங்கத்தின் வைத்தியர் பார்த்தீபன் உமாதேவி தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

''நாடு முழுவதும் ஆயுர்வேத, சித்த, யுனானி என்ற ரீதியில் சுதேச மருத்துவம் இருக்கின்றது.

இந்தக் கற்கைநெறியை நிறைவுசெய்து தமிழ், சிங்களம், முஸ்லிம் என 1,700 பட்டதாரிகள் வேலைக்காகக் காத்திருக்கின்றனர். இதைவிட 600 பேர் இறுதிப் பயிற்சி நிலையில் இருக்கின்றனர்.

இதேநேரம், மருத்துவப் பயிற்சிநெறியை முடித்தும் தம்மைப் பயன்படுத்தாத நிலையில் அல்லது தம்போக்கில் இலங்கையின் சுதேச மருத்துவம் இருப்பது கவலையானது. மக்களுக்காக சேவை செய்ய நாம் தயாராக இருக்கின்றோம். ஆனால், அரசு மௌனமாக இருக்கின்றது.



அதைவிட ஒன்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஏறத்தாழ 1,600க்கும் அதிகமானோர் இருக்கும்போது வெறும் 350க்கும் குறைவானவர்களையே நியமனத்தில் உள்வாங்க அரசு முனைகின்றது. ஆனால், கிராமங்கள் தோறும் சமூக நல வைத்திய அதிகாரிகளாகக் கூட எம்மைப் பயன்படுத்த முடியும்.

இந்தப் போக்கால் இலங்கைக்குரிய சுதேச மருத்துவம் இல்லாது அற்றுப்போகும் நிலையே உருவாகின்றது.

நாட்டிலிருக்கும் எமது வளங்களைக்கொண்டே மருந்துகளை உற்பத்திசெய்ய முடியும். ஆனால், அதை அரசு முன்னெடுப்பதில்லை.

இவ்வாறன நிலையில், மேலதிக தகைமை என்று கூறி வேறு வேலைகளுக்குக் கூட எம்மை இணைத்துக்கொள்கின்றார்களில்லை. இந்த நிலையை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்''- என்றார்.

# போதை மாத்திரைகளுடன் இளைஞர் கைது

**(சாவகச்சேரி நிருபர்)**

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுணாவில் பகுதியில் பெருமளவான போதை மாத்திரைகளுடன் நேற்று முன்தினம் (20) இளைஞரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதன்போது அவரிடமிருந்து 1,010 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் மயூரன் தலைமையிலான போதைப்பொருள் தடுப்புப் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபர் தற்போது சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் அவரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழரசின் கரைதுறைப்பற்று உள்ளூர் அதிகாரசபை வேட்பாளர்கள் - ரவிகரன் எம்.பி. சந்திப்பு





**(விஜயரத்தினம் சரவணன்)**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கரைதுறைப்பற்று உள்ளூர் அதிகாரசபை வேட்பாளர்களுடன் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று முன்தினம் (20) கலந்துரையாடலொன்றை நடத்தியுள்ளார்.

இக்கலந்துரையாடலானது முல்லைத்தீவு - கள்ளப்பாடு வடக்குப் பகுதியில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் உள்ளூர் அதிகாரசபைத் தேர்தலை இலங்கைத் தமிழரசுக் கட்சி கரைதுறைப்பற்றில் எவ்வாறு எதிர்கொள்வதென்பது தொடர்பில் பேசப்பட்டதுடன், இலங்கைத் தமிழரசுக் கட்சி பாரிய பெரும்பான்மைப் பலத்துடன் கரைதுறைப் பற்று உள்ளூர் அதிகாரசபையைக் கைப்பற்றி ஆட்சியமைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் வேட்பாளர்கள் கருத்துகளை முன்வைத்தனர்.

# வெளிநாடுகளிலுள்ள சகோதரர்கள் பணம் அனுப்பாததால் குடும்பஸ்தர் உயிர்மாய்ப்பு!

**(பு.கஜிந்தன்**

வெளிநாடுகளிலுள்ள சகோதரர்கள் பணம் அனுப்பவில்லையென்ற விரக்தியில் குடும்பஸ்தரொருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார். சாவகச்சேரி - நுணாவில், கைதடியைச் சேர்ந்த பரராஜசிங்கம் பாஸ்கரன் (வயது 50) என்பவரே தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த நபரின் சகோதரர்கள் நால்வர் வெளிநாடுகளில் வசித்து வருகின்றனர். இந்நிலையில், அவர்கள் தனக்கு பணம் அனுப்பவில்லையென்ற விரக்தியிலிருந்த குறித்த நபர் கடந்த 18ஆம் திகதி நஞ்சருந்தியுள்ளார்.

பின்னர் அன்றையதினம் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கடந்த சனிக்கிழமை (19) யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இருப்பினும், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் காலை உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# வாள்வெட்டுத் தாக்குதலில் குடும்பஸ்தர் படுகாயம்

**(யாழ். நிருபர்)**

யாழ்., வடமராட்சி கிழக்கு, உடுத்துறை பகுதியில் நேற்று முன்தினம் (20) மாலை வாள்வெட்டுத் தாக்குதலொன்று இடம்பெற்றுள்ளது.

இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதாலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உடுத்துறை பகுதியைச் சேர்ந்த நபரொருவரின் வீட்டுக்கு ஆழியவளை பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் சென்று கலந்துரையாடியபோது அது வாக்குவாதமாக மாறியதால் இவ்வாறு தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த ஆழியவளையைச் சேர்ந்த குடும்பஸ்தர் மருதங்கேணி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய இருவரும் மதுபோதையில் இருந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# இந்தியா செல்ல முட்டுக்கட்டை போட்ட பாகிஸ்தான்

இந்த ஆண்டிறுதியில் இந்தியாவில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. மகளிர் ஒருநாள் உலகக்கிண்ணத் தொடரில் ஆட இந்தியாவுக்குச் செல்ல பாகிஸ்தான் அணி மறுப்புத் தெரிவித்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற ஆடவர் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இந்திய அணி பாகிஸ்தான் செல்லவில்லை. இரு நாடுகளுக்குமிடையேயான போட்டி டுபாயில் நடைபெற்றது. இந்நிலையில், தற்போது இந்தியாவில் நடைபெறவுள்ள மகளிர் உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்க பாகிஸ்தான் அணி இந்தியாவுக்குச் செல்ல மறுத்துள்ளது.

பாகிஸ்தானுக்கான போட்டிகளை வேறு நாட்டில் நடத்தினால் மட்டுமே பங்கேற்போம் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. இதன் மூலம் பாகிஸ்தான் மகளிர் அணி பங்கேற்கும் போட்டிகள் இலங்கை மற்றும் டுபாயில் நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## PSL - 2025

### இன்றைய போட்டி

போட்டி இல. - 12

முல்தான் VS லாஹூர்

முல்தான் - இரவு 8.30 மணி

### முடிவு

போட்டி இல. - 10

கராச்சி - 128/7 (20)

இஸ்லாமாபாத் - 129/4 (17.1)

இஸ்லாமாபாத் 6 விக்கெட்களினால் வெற்றி

## IPL - 2025

### இன்றைய போட்டி

போட்டி இல. - 40

லக்னோ VS டெல்லி

லக்னோ - இரவு 7.30 மணி

### முடிவு

போட்டி இல. - 38

சென்னை - 176/5 (20)

மும்பை - 177/1 (15.4)

மும்பை 9 விக்கெட்களினால் வெற்றி

# அல்காரஸுக்கு அதிர்ச்சியளித்து சம்பியனான ருனே



ஸ்பெயினில் நடைபெற்ற பார்சிலோனா ஓபன் டென்னிஸ் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவு சம்பியனாக முன்னணி வீரர் அல்காரஸை வீழ்த்தி டென்மார்க்கின் ஹோல்கர் ரூனே தெரிவானார்.

கடந்த 12ஆம் திகதி ஆரம்பமாகிய ஆடவருக்கான குறித்த டென்னிஸ் தொடரின் ஒன்றையர் பிரிவு இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதன்போது உலக தரவரிசையில் 2ஆவது இடத்தில் இருப்பவரும் 2 தடவைகள் சம்பியனுமான ஸ்பெயின் வீரர் கார்லஸ் அல்காரஸ், 13ஆம் நிலை வீரரான டென்மார்க்கின் ஹோல்கர் ருனேயைச் சந்தித்தார்.

ஒரு மணி 40 நிமிடம் நீடித்த இந்த ஆட்டத்தில் ஹோல்கர் ருனே 7-6 (8-6), 6-2 என்ற நேர் செட்டில் அல்காரஸுக்கு அதிர்ச்சியளித்து கிண்ணத்தைச் சொந்தமாக்கினார். அவருக்கு இது 5ஆவது சர்வதேச பட்டம். அதேவேளை, 500 தரவரிசை புள்ளிகளை வழங்கும் இத்தகைய போட்டியில் ருனே மகுடம் சூடுவது இதுவே முதல் தடவையாகும்.

இந்தத் தோல்வியின் மூலம் அல்காரஸ் புதிய தரவரிசைப் பட்டியலில் ஓர் இடம் சரிந்து 3ஆவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டார். இதனால் அலெக்சாண்டர் ஸ்வெரவ் இரண்டாமிடத்துக்கு உயர்ந்தார்.

# விளையாட்டுத் துளிகள்

நடப்பு ஐ.பி.எல். தொடரில் டெல்லி கெப்பிடல்ஸ் அணியுடனான 35ஆவது லீக் ஆட்டத்தில் மெதுவாகப் பந்து வீசியதற்காக குஜராத் அணித் தலைவர் சுப்மன் கில்லுக்கு ரூ.12 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

★★★★★

குஜராத் டைட்டன்ஸ் அணியில் இடம்பெற்றிருந்த நியூசிலாந்தின் கிளென் பிலிப்ஸ் கடந்த 06ஆம் திகதி ஹைதராபாத் அணிக்கெதிரான போட்டியில் உபாதைக்குள்ளானதையடுத்து அவருக்கு பதில் வீரராக இலங்கையின் தசுன் ஷானக குஜராத் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார். இவர் முன்னதாக 2023ஆம் ஆண்டு குஜராத் அணியில் விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

★★★★★

அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் 2025–26ஆம் ஆண்டுக்கான வீரர்கள் மத்திய ஒப்பந்தத்தில் சாம் கான்ஸ்டாஸ், பியூ வெப்ஸ்டர், மேத்யூ குஹ்னேமன் ஆகிய இளம் வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். இந்த ஒப்பந்தத்தில் மொத்தம் 23 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். முன்னதாக மத்திய ஒப்பந்தத்தில் இடம்பிடித்திருந்த ஆரோன் ஹார்டி, டாட் மர்ஃபி மற்றும் சீன் அபோட் ஆகியோர் ஒப்பந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

★★★★★

பிரான்ஸின் பாரிஸில் நடைபெற்ற 2ஆவது பிரீஸ்டைல் கிராண்ட்ஸ்லாம் செஸ் தொடரின் இறுதிப்போட்டியில் ஐந்து தடவைகள் உலக சம்பியனான நோர்வேயின் மாக்னஸ் கார்ல்சன்- அமெரிக்காவின் ஹிகாரு நகமுரா மோதினர். இதில் கார்ல்சன் 1.5-0.5 என்ற கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானார்.

★★★★★

இந்திய ஈட்டி எறிதல் வீரரான டி.பி.மானு (25 வயது) கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்த இந்தியன் ஓபன் தடகளத்தில் 81.91 மீற்றர் துரம் ஈட்டி எறிந்து தங்கம் வென்றார். அப்போது இவரிடம் ஊக்கமருந்து சோதனை நடத்தப்பட்டது. இதில் தடைசெய்யப்பட்ட அனபோலிக் ஆன்ட்ரோஜெனிக் ஸ்டிராய்ட் என்ற மருந்து பயன்படுத்தியமை உறுதியானது. இதையடுத்து இவருக்கு நான்கு ஆண்டு தடை விதிக்கப்பட்டுள்ளது.

★★★★★

இந்திய கிரிக்கெட் அணி 9 வருடங்களின் பின் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் பங்களாதேஷ் செல்கிறது. இங்கு இந்த அணி மூன்று ஒருநாள், மூன்று ரி20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கவுள்ளது. இதற்கான போட்டி அட்டவணை வெளியாகியுள்ளது. முதலில் ஒருநாள் தொடர் ஓகஸ்ட் 17,20,23ஆம் திகதிகளிலும் அடுத்து ரி20 தொடரில் ஓகஸ்ட் 26, 29, 31ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளது.

# உலகக்கிண்ண வாய்ப்பை இழந்த மேற்கிந்திய தீவுகள்

## பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகள் தகுதி

இந்தியாவில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. மகளிர் ஒருநாள் உலகக்கிண்ணத் தொடரில் ஆடும் வாய்ப்பை பிரபல அணிகளில் ஒன்றான மேற்கிந்தியத் தீவுகள் இழந்தது. இதன் மூலம் தகுதிச்சுற்றின் அடிப்படையில் பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகள் உலகக்கிண்ணத்துக்குத் தகுதிபெற்றன.

உலகக்கிண்ணத்தில் பங்கேற்கும் 8 அணிகளில் இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, இலங்கை ஆகிய 6 அணிகள் நேரடியாகத் தகுதி பெற்றன. மீதமுள்ள 2 அணிகள் தகுதிச்சுற்று அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டன.

இதற்கான தகுதிச்சுற்று ஆட்டங்கள் பாகிஸ்தானில் நடைபெற்றன. இதில் பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ் ஸ்கொட்லாந்து, அயர்லாந்து மற்றும் தாய்லாந்து ஆகிய 6 அணிகள் பங்கேற்றன. இதில் ஒவ்வொரு அணியும் மற்றைய அணிகளுடன் தலா ஒரு தடவை மோதும். முடிவில் புள்ளிப் பட்டியலில் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் உலகக்கிண்ணத் தொடருக்குத் தகுதி பெறும்.

இதன் முடிவில் பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகள் உலகக்கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்றுள்ளன. தலா 6 புள்ளிகள் பெற்றிருந்தாலும் ரன்ரேட் அடிப்படையில் மேற்கிந்தியத் தீவுகளை (0.626) பின்தள்ளி பங்களாதேஷ் (0.639) தகுதி பெற்றது.



# ஆசிய இளைஞர் மெய்வல்லுநரில் பதக்கம் வென்ற வீரருக்கு வரவேற்பு



(கண்டி நிருபர்)

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெற்ற ஆசிய இளைஞர் மெய்வல்லுநர் போட்டிகளில் வெள்ளிப்பதக்கம் வென்ற கண்டி புனித சில்வெஸ்டர்ஸ் கல்லூரி மாணவன் ஜெனித் லக்சான் ஜென்கின்ஸுக்கு கண்டியில் வரவேற்பளிக்கப்பட்டது.

இவர் தனது சொந்த ஊரான கண்டிக்கு சென்றிருந்தபோது பொதுமக்களால் வரவேற்கப்பட்டார். இவரைப் பாராட்டிப் பதாகைகளும் போடப்பட்டிருந்தன. இவர் முப்பாய்ச்சல் போட்டியில் மேற்படி பதக்கத்தை நாட்டுக்காகப் பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# தியாகதீபம் அன்னை பூபதியின் நினைவு தினத்தை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள்



(வாழைச்சேனை மேலதிக நிருபர்)

தியாக தீபம் அன்னை பூபதியின் 37ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நடைபெற்று வருகின்றன. அதன் ஒரு கட்டமாக வாகரை பிரதேசத்தில் கடந்த வாரம் கண்டலடி வாகரை பொது விளையாட்டு மைதானத்தில் மட்டக்களப்பு தாயக செயலணியினரால் விளையாட்டு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இதன்போது மரதனோட்டம், சைக்கிளோட்டம், கயிறிழுத்தல், உதைபந்தாட்டம், பெண்களுக்கான எல்ல விளையாட்டு என பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. இப்போட்டி நிகழ்ச்சிகளில் இளைஞர், யுவதிகள் ஆர்வத்துடன் பங்குபற்றினர்.

போட்டி நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்ற விளையாட்டு அணிகள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுப் பொருட்கள், வெற்றிக் கேடயங்கள், பதக்கங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் அதிதிகளாக மட்டக்களப்பு தாயக செயலணி இணைப்பாளர் இ.செல்வகுமார், வாகரை பிரதேச தாயக செயலணி ஒருங்கிணைப்பாளர் யு.புவனேஸ்வரன் மற்றும் அன்னை பூபதியின் பேரன் யோ.அரவிந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாணவர்களின் கல்வி வழிகாட்டியான ஜூனியர் தமிழன் ஏப்ரல் மாத சஞ்சிகைகள்

தற்போது விற்பனையில்...



- புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்
- வினாத்தாள் I, II வழிகாட்டிகள்
- தமிழ், கணிதம், சுற்றாடல் பாட செயலட்டைகள் (தவணைகளின் அடிப்படையில்)
- திறன் அடிப்படையிலான நுண்ணறிவு விளக்கங்கள்
- தரம் - 5 சுற்றாடல் பாடத்தொகுப்பு - 04, 05
  - இசைக்கருவிகளின் சுற்றாடல்
  - இரு வினாக்களை அடக்கிய ஒரு வினாக்களின் தொகுப்பு
- நுண்ணறிவுத்தொடர் 2 - கட்புலனறிவு
- விஞ்ஞான பரிசோதனைகள்
- சிங்கள, ஆங்கிலப் பாட பயிற்சிகள்

ஒவ்வொரு சஞ்சிகைக்குள்ளும் இணைக்கப்பட்டுள்ள படத்தாள் ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்.



ரூபா 100/= ரூபா 120/= ரூபா 120/=

- மாணவர்களின் சித்திரங்கள்
- கதைக்குள் ஒரு கணிதப்புதிர் - 04, குறுக்கெழுத்துப்போட்டி
- சிறுவர் திருக்குறள் சிறுகதை

தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களால் தொகுத்து வெளியிடப்படுகிறது

மேலதிக விபரங்களுக்கு :

011 5 200 900 | 074 1684643 | 0777 983308 | Junior Thamilan

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7